# ஆசிரியர் வழிகாட்டி
# கிறிஸ்தவம்

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது)

# தரம் 1

முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk
அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கிறிஸ்தவம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)

# தரம் 1

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

கிறிஸ்தவம்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் 1

முதலாம் பதிப்பு - 2026

©தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பு - தேசிய கல்வி நிறுவகம்
ISBN

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

## பணிப்பாளர் நாயகம் வழங்கும் செய்தி

இலங்கைப் பொதுக்கல்வியின் இத்தகைய மறுசீரமைப்பு ஒவ்வொரு கற்போனதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான செம்மையான பாதையை இலக்காகக் கொண்டுள்ளது.

தேர்ச்சி மையக் கற்றல், பரந்துபட்ட சிந்தனை, ஆக்கபூர்வமான ஆற்றுகை, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்குரிய ஆற்றல்கள், ஆழ்ந்த தொழினுட்ப அறிவு, நல்லொழுக்கம் கொண்ட நற்பிரசை போன்ற பல்வேறு குணநலன்களில் அவதானம் செலுத்துவதற்கு ஏதுவானவகையில் கலைத்திட்டச் செயலொழுங்கில் நவீனமயமாக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் முறைமை மற்றும் கணிப்பீட்டுமுறை ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

கல்வியியலாளர்கள், துறைசார்கல்வி அறிஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வகைப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தால் 2026 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 1 மற்றும் 6ஆம் தரங்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட இக்கலைத்திட்டம் மற்றும் அதற்குரிய கற்றல் சாதனங்களின் பண்புத் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக விசேட ஆர்வத்துடன் செயலாற்றிய கௌரவ கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது ஆளணியினர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது ஆளணியினர் ஆகியோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது.

அத்துடன், இவ்விடயத்தில் விசேட அர்ப்பணிப்புடன் செயலாற்றிய தேசிய கல்வி நிறுவகத்தின் நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஈடுபாட்டுடன் செயற்பட்ட கல்வி அலுவல்கள் சபை அங்கத்தவர்கள் அனைவரையும் மனப்பூர்வமாக நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இதனை வெற்றிகரமாக சாத்தியப்படுத்துவதற்கு முன்னின்று அயராது உழைத்த தேசிய கல்வி நிறுவகத்தின் அனைத்து ஆளணியினருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாக வேண்டுமென நம்புகின்றேன்.

பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

எமது நாட்டின் சகல பாடசாலைகளின் கலைத்திட்டத்திற்கான இனங்காணப்பட்ட இலகுவான கற்றல் துறைகள் காலதத்திற்கு காலம் மாற்றமுறும் நாட்டின், உலகின் பேண்தகு அபிவிருத்தியின் சவால்களை வெற்றிக் கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேலெலச் செய்கின்றது. கற்றல் - கற்பித்தல் செயன் முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்துவதுடன் புதிய பாடங்கள் கலைத்திட்டத்தினுள் அறிமுகம் படுத்தப்படுகின்றது. அத்துடன் மாற்றங்களுக்கமைய கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் காலத்திற்கு ஏற்ப அபிவிருத்தி அடையும். அதற்கேற்ப 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கல்விச் சீர்த்திருத்த கலைத்திட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2026ஆம் ஆண்டில் தரம் 1, 2027 ஆம் ஆண்டில் தரம் 2, 2028 அம் ஆண்டு தரம் 3, 2029 ஆம் தரம் 04 மற்றும் 2030 தரம் 05 ஆகிய ஆரம்பபிரிவு தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்படும். ஆரம்ப கல்வித்துறை மாணவர்களுக்கான செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும் ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடம் தொடர்பான அறிவைப் பெறுவதோடு பெற்ற அறிவினை ஏற்ற சந்தர்ப்பத்தில் பிரயோகிப்பதற்கான திறன் விருத்திக்கு இக்கலைத்திட்டம் உதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும். 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான ஆற்றல் மேம்பாட்டுக்கும் அதனூ டாக மாணவர் ஆளுமை விருத்திக்கும் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகள் உறுதுணையாக அமையும்.

புதிய கலைத்திட்ட சீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைப் பணிகளை மேற்கொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்கள் வழங்கிய சேவையைப் பெரிதும் போற்றுகின்றேன். மேலும் இக்கலைத்திட்டத்துக்கான கற்றல் சாதனங்களைத் தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கிய நிறுவனத்தின் அனைத்து ஆளணியினருக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல்வேறுவகையிலும் வழங்கிய உதவிகளும் இக்கற்றல் சாதனங்கள் பண்புத்தரம் கொண்டதாகவும் உயரிய மேம்பாடு கொண்டதாகவும் மிளிர்வதற்கு உறுதுணையாக இருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் நினைவுபடுத்துகின்றேன்.

கலாநிதி எஸ்.ஏ.டி சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனை:**

பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரண, பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
கலாநிதி தர்ஷன சமரவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞதன பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**மேற்பார்வை**

ஆர். எம். கே. த சில்வா, பணிப்பாளர்,
முன்பிள்ளை அபிவிருத்தி மற்றும் ஆரம்பநிலை கல்வி திணைக்களம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட இணைப்பாளர்:**

லக்மாலி ஆனந்தகொட, உதவி விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு:**

எம். ரதீகா சமன்தி மென்டிஸ், பரி. தோமா கல்லூரி, கல்கிசை

எஸ். இ. பி. சீ. பிரனாந்து, வெஸ்லி கல்லூரி, கொழும்பு 8.

எம். ஐ. என். எப். சேனாரத்ன, ஆசிரியர் ஆலோசகர், (கிறிஸ்தவம்)
கல்வி திணைக்களம், நீர்கொழும்பு.

காமன் சகுந்தலா ரொட்றரிகோ, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.

ஹிரன்தி சஜீவனி பெரேரா, பிஷப் கல்லூரி, கொழும்பு 03

அருணி இந்திகா பெரேரா ஜயதுங்க, பிஷப் கல்லூரி, கொழும்பு 03

**சரவைநோக்கு:**

வண ரோஹித த சில்வா. தேவகெதிலும, வெளிவாரி விரிவுரையாளர்

இலங்கை இறையியல் கலைக்கூடம், பிலிமத்தலாவ

**தமிழாக்கம்**

எம். பி. செல்வநிதி பெரேரா, ஆசிரியர் ஆலோசகர், (ஓய்வுநிலை)

**சித்திரம் - அட்டைப்படம்:**

ஐ. எம். எம். பி. இலங்ககோன்,
பரி. தோமா கனிஷ்ட பாடசாலை, கொழும்பு 03
டீ. கே. எம். ஹெட்டிகே. வெஸ்லி கல்லூரி, கொழும்பு 09

**கனிணி வடிவமைப்பு**

ரட்ணராஜா தனுஷா, வரைகலை வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

**அறிமுகம் - சமயம் மற்றும் விழுமியக்கல்வி - ஆரம்பக்கல்வி**

பன்முக பண்பாட்டுக் கலாசாரங்கள் கொண்ட சமூகத்தினருக்குச் சமயம் கற்பித்தல் என்பது பிரச்சினைக்குரிய செயற்பாடாகும். பல்வேறுபட்ட சமயங்களின் நம்பிக்கைகள் மற்றும் அதற்கான பிரயோக நடவடிக்கைகளில் வேறுபாடுகள் உள்ளன. அதனால் அந்தந்தச் சமய நிறுவனம் சார் ஒழுங்கமைப்பில் பல்வகையான வழிபாட்டு முறைகளைப் பல்வேறுவிதமாக கடைப்பிடிப்பதன் காரணமாக அவர்கள் அனைவரையும் ஒரே வலையமைப்பிற்குள் இணைப்பது இயலாத காரியமாகின்றது. தேசிய பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தில் அவை எதிர்மறையான பல விளைவுகளை உருவாக்குகின்றன. எனவே, மாற்றுவழியில் இதற்கான தீர்வை மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. அதற்காக, தேசிய கல்விப் பரப்பில் சமயம் மற்றும் விழுமியம் சார் கல்வியானது எவ்வாறு உதவியாக அமைந்துள்ளது என்பதை தெளிவுபடுத்துவது தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின் பிரதான குறிக்கோளாகும்.

சமயம் மற்றும் விழுமியங்கள் சார் கல்வியின் இறுதி நோக்கமாவது; பிள்ளையின் வயது அடிப்படையில் சமயக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதாகும். எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களது அறிவு, இதயம், உறுப்புகள், உள்ளம் ஆகியவற்றுடன் சமநிலை கொண்ட மனப்பாங்கினை விருத்தி செய்வதன் ஊடாக எதிர்கால உலகை வெல்லக்கூடிய ஒழுக்கம் கொண்ட ஆக்கபூர்வமான பிரஜையை உருவாக்கி சமூகத்திற்கு முன்வைக்க வேண்டியது இன்றியமையாத தேவையாகின்றது.

பிரதான ஐந்து சமூக - சமய எண்ணக்கருக்களின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்விக்கான பாடத்திட்டச் சட்டகத்தில் கல்வி விருத்தியைப் போலவே தனியாள் விருத்திக்கும் அவசியமான பிரதான திறன்களை மேம்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க வருங்காலச் சவால்களுக்கு உத்வேகத்துடனும் தைரியத்துடனும் முகங்கொடுக்கக்கூடிய வினைத்திறனுடைய நபர்களை சமூகத்திற்கு வழங்குவதற்கு ஏற்ற அவசியமான அடித்தளத்தை ஆரம்பக்கல்வியில் இருந்தே கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இப்பாடத்திட்டச் சட்டகத்தின் எதிர்பார்ப்பாகும்.

ஆரம்பக்கல்விக்கான கிறிஸ்தவப் பாடத்தினை பாடத்திட்டத் தயாரிப்பின்போது உரிய தரங்களில் கற்கின்ற மாணவர்களின் வயது மட்டம், முதிர்ச்சி, மொழியாற்றல், இரசனை, விருப்பு ஆகியன தொடர்பாகக் கவனம்செலுத்தப்பட்டுள்ளது. உரிய கற்றல் பேறுகளை எய்தும் பொருட்டு, அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவங்களைப் பெறுகின்ற விதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு சிறு பிள்ளைக்கு கிறிஸ்தவப் பாடத்தினை மிகவும் பொறுப்புடன் அவதானமாகக் கற்பிக்க வேண்டும். சிறுபராயத்திலே ஏதேனும் மிகச் சிறியதொரு விடயம் தொடர்பாக தவறான புரிதல் ஏற்படுமாயின் அது அப்பிள்ளையின் முழு வாழ்க்கையில் மட்டுமல்ல நித்திய வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஆகவே கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கு சந்தேகமான அல்லது புரியாத விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தெளிவுபடுத்திக்கொண்டு சரியான விளக்கத்தை பிள்ளைகளுக்கு அளிப்பதோடு தாமும் அதற்கென முன்கூட்டியே தம்மை தயார் செய்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் தானும் கிறிஸ்துவோடு ஒன்றித்து அவரைப் பின்பற்றி வாழ வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். ஒவ்வொரு ஆசிரியரும் முறையாக கால அட்டவணை தயாரித்து அதன்பிரகாரம் செயற்படும்போது பிள்ளைகளுக்கு மிகவும் ஏற்ற மகிழ்ச்சியான கற்றல் சூழல் ஒன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் வழங்கும் செய்தி | iii |
| முன்னுரை | iv |
| கலைத்திட்ட பங்களிப்பு | v |
| அறிமுகம் | vi |
| உள்ளடக்கம் | vii |
| கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு | xiii - xviii |
| எண்ணக்கரு - முதலாம் தவணை | 1 |
| எண்ணக்கரு - இரண்டாம் தவணை | 28 |
| எண்ணக்கரு - மூன்றாம் தவணை | 59 |

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு**

ஆரம்பக்கல்வித் தரங்களில் கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்கும்போது சிறு பிள்ளைகள் விரும்பக்கூடிய சமய வாழ்வு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைப் பெருமளவில் பயன்படுத்த வேண்டும். வழிபாடு, சமயச் சுற்றுலா, தேவாலயங்களைத் தரிசித்தல் என்பன இவ்வொழுங்குமுறையில் பிரதான இடம் வகிக்கின்றன. மேலும், உவமைகள், சுயசரிதை, மீட்பின் வரலாறு தொடர்புபட்ட கதைகளை இரசிக்கும் விதத்தில் முன்வைக்கவேண்டும். இவை தொடர்பான பாடல்கள், நடிப்பு, சித்திரம் தீட்டுதல், போன்ற அழகியல் செயற்பாடுகளில் மாணவரை அதிகளவில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அதனால் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு மாணவருக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அழகிய அனுபவமாக அமைவதோடு, கத்தோலிக்க திருமறையைக் கற்றுக்கொள்வதில் அதிக விருப்பமும் மாணவர் மத்தியில் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**பாடசாலைக் கொள்கை மற்றும் வேலைத்திட்டம்**

பாடசாலைக் கலாசாரத்துடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களில் கிறிஸ்தவ பாடத்துக்குரிய எண்ணக்கருவைப் அதிகளவில் கட்டியெழுப்ப முடியும். பாடசாலைக் கலாசாரத்தில் இத்தகைய எண்ணக்கருவைக் கட்டியெழுப்பும் புதிய அம்சங்களின் உருவாக்கம் தொடர்பில் அதிபர்களது விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் காலை வழிபாட்டு முறைமை இதில் பிரதான இடம் பெறுகின்றது. இந்த வேலைத்திட்டம் முதலாம் தரத்தில் மிகவும் எளிமையான முறையில் ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாம் தரம் வரையில் படிப்படியாக விருத்தி செய்யப்பட்டு தொடர்ந்து பல்வேறு அம்சங்களை இணைத்துக்கொள்ள முடியும்.

ஆசிரியர் மாணவர்களைத் தவணைக்கு ஒருதடவையேனும் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு இடம்பெறுகின்ற வழிபாட்டு விதிமுறைகள் மாணவர் மத்தியில் ஆர்வத்தையும் பக்தியையும் உருவாக்கும். இச்செயற்பாடுகளால் பொதுநிலையினர் மற்றும் துறவறம் காப்பவர்கள் இடையே தொடர்பாடல் விருத்தியடைவதன் ஊடாகச் சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் அது ஏதுவாக அமைகின்றது.

தனியாள் தூய்மை, ஒழுக்கம், கருணை, இரக்கம், ஆசீர்வாதம் என்றவாறு கட்டியெழுப்பப்படும் சமத்துவம், நல்லிணக்கம், ஒத்துழைப்பு ஆகிய பண்புகளால் பாடசாலைக் கலாசாரம் ஊட்டம் பெறுகின்றது. அது போன்ற கலாசாரத்தில் சமயம் மற்றும் விழுமியம் போன்ற விடயங்களில் எதிர்பார்க்கப்படும் அவசியமான கற்றல் எண்ணக்கருக்களை உறுதிசெய்து கொள்வது மிக இலகுவாக அமையும். அவ்வாறான சூழ்நிலை ஏற்படும்போது பாடம் தொடர்பாகக் கற்றுக்கொண்ட அனைத்தையும் பிரயோகமுறையில் செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும்.

**கணிப்பீடு**

ஆரம்பக் கல்வித் தரங்களில் எழுத்துச் சோதனைகளை விட பிரயோகச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு பிரதான இடம் பெறுகின்றது. அவதானிப்பு, கண்டறிதல், திருத்தலப் பயணங்கள், அபிநயம், நாடகம், பொம்மலாட்டம், உரையாடல், வாய்மூல வினாக்கள் போன்ற கணிப்பீட்டு முறை என்பன இதற்கு ஏற்புடையதாகும்.


**சமயம் மற்றும் விழுமியம் சார் பாடத்தின் நோக்கம்**

நிலைபேறு கொண்ட சமாதான மேம்பாட்டை எய்துவதற்காக பரந்துபட்ட விளக்கம் உடையவரும் பல்வகைமைக்கு மதிப்பளிக்கக்கூடிய மனவெழுச்சியுடன் சமநிலை பேணுபவரும் ஜனநாயகம் மற்றும் ஒழுக்கம் பேணுபவருமான உலகளாவிய ரீதியிலான பிரசையொருவரை உருவாக்குதல்.

**சமயம் மற்றும் விழுமியக்கல்வி பாடக் கற்பித்தலில் எதிர்பார்க்கப்படுபவை**

1. அறிவு, ஒழுக்கம், மனவெழுச்சி என்றவகையில் சமநிலை கொண்ட பிரஜைகளை உருவாக்குதல்
2. மனித பெறுமானங்களின் அடிப்படையில் அமைந்த பல்வேறு பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்களை புரிந்துகொண்டு மதிப்பளித்தல்
3. தமது சூழலில் காணும் வேறுபாடுகளை தர்க்கரீதியாக ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளித்து சமூக நல்லிணக்கத்தை வலுவூட்டல்
4. உள்ளக சமாதானம் மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவித்தல், பகிர்ந்து கொள்ளல்
5. தனியாள் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கு இடையில் சுகாதாரம் பற்றிய தொடர்பாடலை மேம்படுத்தல்
6. சமூக - கலாசார மற்றும் சூழல்நேயம் கொண்டவர்களுடன் பங்களிப்புச் செய்து, சவால்களை எதிர்கொண்டு நேர்மறையான முறையில் செயலாற்றல்

## சமயம் மற்றும் விழுமியக் கல்வி பாடத்தின் அத்தியாவசிய கற்றல் எண்ணக்கரு



| சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்வியின் பிரதான அடிப்படை எண்ணக்கரு | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்வதற்கு ஆற்றலுடன் கூடிய நேர்சிந்தனையை போசணைப்படுத்துவது போன்று உடல் உளம் சமூகம் சார்ந்த சிந்தனைகள் நிறைந்த ஆளுமை விருத்தியுடைய நபரை உருவாக்குதல். |
| சமூக மற்றும் கலாசார உணர்வுகள் | சமயம் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து மற்றும் ஏனையோரை அறிவுபூர்வமாக, நேயத்துடன் ஏற்றுக்கொள்வதோடு மற்றைய சமூக கலாசாரப் பின்னணி தொடர்பாகப் புரிந்துணர்வுடன் செயற்படுகின்ற ஆற்றல். |
| சூழல் நேயம் | சூழல் நேயம் வாயிலாக ஒருவருக்கு அவரது சுற்றாடல் தொடர்பான விபரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் தயார்ப்படுத்துவதற்கும் ஏற்ற திறமை தொடர்பாக விளக்கிக் கூறுவார். இது அனைத்து சமயக் கொள்கைகளிலும் காணக்கூடிய பிரதான பண்பாகும். இது தீர்க்கமான ஒரு காரணியாக அமைவது ஒருவருக்கு பல்வேறுபட்ட சூழல் நிலைமைகளுக்கு தம்மை ஏற்புடைமை ஆக்கிக்கொள்வதற்கு இடமளிப்பதாகும். |
| நன்னடத்தை விழுமியங்கள் மற்றும் சமத்துவம் | சிறப்பான சமூக நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏற்புடைய சமூகம், கலாசாரம் மற்றும் சமயப் பெறுமானங்கள், கொள்கைகள், நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் என்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதாகும். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | உடல் மற்றும் உள சமநிலையைக் கடைப்பிடித்து மனச்சோர்வற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கான எப்போதும் நல்ல நினைவாற்றலுடன் செயற்படுதல். |

| சமயம் மற்றும் விழுமியம்<br>ஆரம்பக் கல்விக்கான அடிப்படை எண்ணக்கரு விபரங்கள் | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | ஆசிரியர் மற்றும் மூத்தவர்களின் வழிகாட்டுதலின் கீழ் “சமயம்” எனும் எண்ணக்கருவை அறிந்து தமது வரலாறு மற்றும் நடத்தையை சரியாக வடிவமைத்துக் கொள்ளும் எளிய சமய செயற்பாடுகளில் ஈடுபடுவர். |
| சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு | தாம் வாழும் பல்வகைமை சார் சமயச் சூழலில் இடம்பெறுகின்ற சமயம் சார்ந்த விழாக்கள், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை தொடர்பான அனுபவங்களைப் பெற்று கலாசார பல்வகைமை தொடர்பான விளக்கத்துடன் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படுவார். |
| சூழல் நேயம் | வாழ்க்கை என்பது சுற்றுச் சூழலுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமையை சமயத்தின் ஊடாகப் புரிந்துகொண்டு, சூழல் நேயத்துடன் செயலாற்றுவார். |
| நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் | சமயம் சார்ந்து நடைபெறுகின்ற விதிமுறைகள், சட்டதிட்டங்கள், வணக்கமுறைமை மற்றும் பிரயோகிக்கும் விசேட சொல்லாடல் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். சமயம் சார்ந்த தலங்களுக்கு ஏற்றவாறு உடையணிதல், சரியான நடத்தையை மேற்கொள்வதற்கு ஆவன செய்வார். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | அன்றாட செயற்பாடுகளை உறுதியுடன் நினைவாற்றலுடனும் செய்வதற்கு பயிற்சி பெற்று, தமது நடவடிக்கைகளைக் சோர்வின்றி மகிழ்ச்சியாகச் செய்வார். சிறந்த அன்றாட நடத்தைக் கோலத்தை மேற்கொள்வதற்காக சிறந்த ஆரோக்கிய நற்பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். |

| தரம் 1 - சமயம் மற்றும் விழுமியப் பாடச் சட்டகம் | | | |
|---|---|---|---|
| **எண்ணக்கரு** | **கற்றல் பேறு** | **செயல்திற தர நிலைகள்** | **கணிப்பீட்டு நியதி** |
| நடத்தை மேம்பாடு | 1. நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற முக்கியமான சமய வழிபாட்டு ஒழுக்க விதிமுறைகளையும் சமய அடிப்படையில் தமது அறநெறி பற்றிய எண்ணக்க ருக்களையும் இனங்காண்பார். | 1.1 சமயம் தொடர்பான விசேட சந்தர்ப்பங்களில் கலந்துகொண்டு அனுபவம் பெறுவார். | 1.1.1 பங்குபற்றுதல் |
| | | 1.2 சமயநெறி தொடர்பான விசேட சமய வழிபாட்டு வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.1 விசேட சமய நிகழ்வுகளை இனங்காணல்.<br><br>1.2.2 ஏற்ற சந்தர்ப்பத்தில் அவற்றைப் பயன்படுத்தல். |
| | | 1.3 சமயநெறி தொடர்புபட்ட பிரதான குறியீடுகள் மற்றும் சின்னங்களை இனங்காண்பார். | 1.3.1 குறியீடுகள், சின்னங்களை இனங்காணல். |
| | | 1.4 சமய பாடம் பற்றிய விளக்கம் பெற்று அதனைப் பிரயோகிப்பார். | 1.4.1 சமய பாடநெறி தொடர்பாக விளக்கமாக அறிந்து கொள்ளல்.<br><br>1.4.2 சமய பாடத்தைப் பிரயோகித்தல் |
| | 2. சமய அறிஞர்கள் / சமயத் தோற்றுவிப்பாளர்கள் தொடர்பான வரலாறு /சமயம் சார்ந்த கதைகள் மற்றும் திருவிவிலியத்தில் உள்ள போதனைகள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பார். | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1. சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | 2.2 சமயம் சார்ந்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு சமய அறிஞர்களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேடமான பண்புகளைக் கூறுதல். |
| | | 2.3 சமயம் சார்ந்த கதைகளின் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுதல். |
| | | 2.4 திருவிவிலியத்தில் உள்ள கதைகளை விளங்கிக்கொண்டு அதனை செவிமடுத்துத் தாளத்துடன் இசைப்பார். | 2.4.1 திருவிவிலியத்தில் உள்ள கதைகளுக்குச் செவிமடுத்தல்<br><br>2.4.2 தாளத்துக் கேற்றவாறு பாடுதல் |
| | | 2.5 திருவிவிலிய போதனைகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.5.1 முன்மாதிரியைக் கூறுதல் |
| சமூக, கலாசார நல்லிணக்கம் | 3. சமய வணக்கத் தலங்களை இனங்கண்டு அவை பற்றி அறிந்து அங்கு கௌரவமான முறையில் நடந்துகொள்வார். | 3.3.1 சமயத்த லங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் குறிப்பார். | 3.1.1 இடங்களை இனங்காணல்.<br><br>3.1.2 இடங்களைப் பெயர் குறித்தல் |
| | | 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறைகளுக் கேற்ப நடந்துகொள்வார். | 3.2.1 சமய அறநெறிக்கேற்ப நடத்தையை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | | 3.3 பொருத்தமான ஆடையணிகளை அணிந்து கண்ணியமான முறையில் உரையாடலைக் கையாள்வார். | 3.3.1 சரியான முறையில் செம்மையாக உரையாடுதல்<br><br>3.3.2 உடல் அவயவங்களை உரியவாறு பயன்படுத்தல். |
| | 4. சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி அவை தொடர்பான அனுபவங்களைப் பெறுவார். | 4.1 விசேட சமய நிகழ்வுகளில் வினைத்திறனுடன் பங்குகொள்வார். | 4.1.1 வினைத்திறனுடன் பங்குபற்றுதல் |
| | | 4.2 விசேட கலாசார நிகழ்வுகளில் செயலூக்கத்துடன் பங்குகொள்வார். | 4.2.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார நிகழ்வு ஒன்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுவார். | 4.3.1 செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br><br>4.3.2 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br><br>4.3.3. சிறந்த ஆக்கபூர்வமான ஆற்றல்<br><br>4.3.4 உபகரணங்களை உரியவாறு பயன்படுத்தல் |
| கண்ணியம், ஒழுக்கம் மற்றும் இணக்கப்பாடு | 5. புனித தலங்களில் பின்பற்ற வேண்டிய மரபுரீதியான விதிமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் சீரான முறையில் பின்பற்றுவார். | 5.1 புனித தலங்களில் பின்பற்ற வேண்டிய மரபுகள், விதிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்களை இனங்காண்பார். | 5.1.1 சரியான பழக்க வழக்கங்களைக் கூறுதல்<br><br>5.1.2 விதிமுறைகளை முறையாகக் கூறுதல். |
| | | 5.2 சரியான விதிமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைவாகச் செயற்படுவார். | 5.2.1 நடவடிக்கை மேற்கொள்ளல் |

| | | | |
|---|---|---|---|
| | 6. சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறையையும் உரிய பழக்கவழக்கத்தையும் உடலின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவார். | 6.1 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சீரான பழக்கவழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1. உரியவாறு வழிமுறைகளில் ஈடுபடுதல். |
| | | 6.2 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது விதிமுறைகளை ஏற்றவாறு மேற்கொள்வார். | 6.2.1 முறையான பழக்கவழ க்கங்களை மேற்கொள்ளல். |
| | | 6.3 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான உடலின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 உடல் பயன்பாட்டை சீரான முறையில் வெளிக்காட்டுவார். |
| | | 6.4 சமய நடவடிக் கைகளின்போது உரிய முறையில் பொருத்தமான வார்த்தைகளைப் பிரயோகிப்பார். | 6.4.1 சிறப்பான சொற்பிரயோ கத்தைப் பயன்படுத்துவார். |
| | 7. ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | 7.1 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 சிறப்பான நற்பண்புகளை அறிந்து அவற்றை இனங்காணல் |
| | | 7.2 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களை இனங்காண்பார். | 7.2.1 சரியாக முறையில் நற்பண்புகளை அறிந்து இனங்காணல் |
| | | 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்றவகையில் தமது நடவடிக்கைக-ளை கொள்வார். | 7.2.1 செம்மையான நடத்தையை மேற்கொள்ளல். |
| | | | 7.3.1 சீரான நடத்தையை கடைபிடித்தல். |

| | | | |
|---|---|---|---|
| சூழல் நேயம் | 8. தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்ப தற்காகச் செயலாற்றுவார். | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br><br>8.2.2 ஆக்கபூர்வமான திறன்<br><br>8.2.3 உபகரணப் பயன்பாடு<br><br>8.2.4 மதிப்பளித்தல் |
| | 9. சமய அறிஞர்கள் மற்றும் ஞானிகள் இயற்கையின் பெறுமானத்தை மேலோங்கச் செய்த விதம் பற்றி அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயலாற்றுவார். | 9.1 கதைகள் / கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்கையின் பெறுமானத்தை இனங்காண்பார். | 9.1.1 அவதானமாகச் செவிமடுத்தல்<br><br>9.1.2 தெளிவாக விளங்கிக் கொள்ளல்<br><br>9.1.3 கருத்துக்களை வெளிப்படுத்தல் |
| | | 9.2 சுற்றாடல் வளங்களைச் சிறந்தமுறையில் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 9.2.1 சிக்கனமான முறையில் பயன்படுத்தல் |
| | | 9.3 உயிரினங்களை அன்பு செய்வார். | 9.3.1 அன்பு செய்தல் |
| | | 9.4 உயிரினங்களுக்கு உணவு வழங்குவார். | 9.4.1 உணவு, பானம் ஆகிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை | 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.1 சிறந்த நடத்தைகளை வரிசைக் கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 ஒழுங்குமுறையில் கூறுதல் |
| | | 10.2 சிறந்த சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.2.1 சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 11. அன்றாட நடவடிக்கைக ளின்போது அறிவுத்தெளிவுடன் சுயாதீனமாகச் செயற்படுவார். | 11.1 நடக்கும்போது அறிவுத்தெளியுடன் சுயாதீனமாக நடப்பார். | 11.1.1 அறிவுத் தெளியுடன் சுயாதீனமாக நடத்தல் |
| | | 11.2 நடக்கும்போது அடிப்பாதத்தில் உணருகின்ற மென்மை - வன்மை, ஈரம்- வரட்சி, சூடு - குளிர் என்பவற்றை உணர்ந்து நடப்பார். | 11.2.1 மென்மை- வன்மை, ஈரம் - வரட்சி, சூடு - குளிர் ஆகியவற்றை உணர்ந்து அறிந்து கொள்ளல். |
| | | 11.3 எளிமையான முறையில் தியானத்தில் (Meditation) ஈடுபடுவார். | 11.3.1 உடல் உறுப்புக்களின் பயன்பாட்டை சீரான முறையில் மேற்கொள்ளல். |
| | | | 11.3.2 அதனை ஏற்றவாறு பிரயோகித்தல் |

## உள்ளடக்கம்

## முதலாம் தவணை

**எண்ணக்கரு - நடத்தை அபிவிருத்தி**

பாடம் 1 - கடவுள் படைத்த உலகம்

பாடம் 2 - சமாதானத்தின் மகன் இயேசு

பாடம் 3 - தூயாவியின் வருகை

**எண்ணக்கரு - கலாச்சாரம் ஒழுக்கவியல் மற்றம் சமூக நல்லிணக்கம்**

பாடம் 4 - இது எமது ஆலயம்

**எண்ணக்கரு - சுற்றாடல் நல்லிணக்கம்**

பாடம் 5 - உலகத்தைப் பாதுகாப்போம்

**எண்ணக்கரு - நல்வாழ்வு நற்பண்பு கொள்கைகள்**

பாடம் 6 - இயேசுவுடன் கதைப்போம்

பாடம் 7 - கடவுள் அருளிய எனது குடும்பம்

**எண்ணக்கரு - உளமும் உடலும் நல்வாழ்வும்**

பாடம் 8 - கடவுளை வணங்குவோம்.
கடவுளின் வார்த்தைகளை வாசிப்போம்.

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# பாடம் 1 - கடவுள் படைத்த உலகம்

| |
|---|
| கடவுள் உலகத்தின் படைப்பாளரும் பாதுகாவலரும் என்பதை உறுதிப்படுத்தி கடவுள் படைப்புக்களை அறிந்து நன்றி கூறி பாதுகாப்பதற்கு ஈடுபடுத்தல் இந்த பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு / சமயம் சார்ந்த கதைகள் மற்றும் திருவிவிலியத்திலுள்ள போதனைகள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பர். | உலகத்தின் படைப்பாளர் கடவுள் | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுப்பர். |
| | | 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியம் தொ.நூ 1:1-3 கடவுள் படைப்பில் உள்ளவற்றை காண்பிக்கும் பல்வேறு படங்கள் / படங்கள் உள்ளடக்கிய சிறுவர் வேதாகமம், A4 தாள், கத்தரிக்கோல், பசை



**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு**

**படிமுறை 1**

- மாணவர்களை பாடசாலை தோட்டத்துக்கு அழைத்து செல்லுங்கள். பிள்ளைகளுடன் தோட்டத்தில் பயணம் செய்து சுற்றாடலில் காணப்படுபவைகளைக் குறித்து கலந்துரையாடுங்கள். கலந்துரையாடலில் வானம், புவி, சூரியன், மரங்கள், பூக்கள், பறவைகள், மிருகங்கள் குறித்து அவதானம் செலுத்துங்கள்.
- சுற்றாடலில் காணப்படாத வானம், புவி, கடல், நதி போன்றவைகளை படங்கள் மூலமாகக் காட்டுதல் சிறந்தது.
- புவியானது வெறுமையாக இருந்தது எனவும் குறிப்பிடுங்கள்.
- வானத்தைக் காட்டி அங்கு காணப்படுபவைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இரவில் வானத்தில் காணப்படுபவைகளைக் கலந்துரையாடுங்கள். (நிலா, நட்சத்திரங்கள்)
- நிலத்தைக் காண்பித்து நாம் வாழும் புவியில் காணப்படுபவைகள் குறித்துக் கலந்துரையாடுங்கள். (நிலம், மலை, மரம், பூ, வனாந்திரம், நதி, குளம்)
- புவியில் வளரும் தாவரங்கள் இல்லாமல் நாம் வாழ்வது சிரமம் என்பதை அறிவுறுத்துங்கள். நாம் வாழ உணவு, நீர், வளி என்பன அவசியம் என்பதை சுருக்கமாக குறிப்பிடுங்கள்.
- கடல், நதி, வாவி, குளம் என்பனவற்றிலிருந்து மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்றது என்பதை அறிவுறுத்துங்கள்.
- கடல், நதி, வாவி, குளம் போன்றனவற்றில் நீர் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன என்பதை அறிவியுங்கள்.
- ஆகாயத்தில் பறக்கும் பறவைகளும் புவியில் ஊர்வனவும் உள்ளன என்பதை குறிப்பிடுங்கள்.
- இவைகள் எல்லாவற்றையும் படைத்தவர் கடவுள் என்பதை அறிவுறுத்துங்கள்.

**படிமுறை 2**

- உலக படைப்பின் விபரங்கள் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளைக் கேட்பதற்கு இடமளியுங்கள். மாணவர் அமருவதற்கான இருப்பிடங்களை ஆயத்தம் செய்யுங்கள்.
- மாணவருக்கு கேட்கும் விதமாக திருவிவிலியம் தொ.நூ. 1:1-31 வரை வாசியுங்கள்.

**படிமுறை 3**

- கடவுள் இவைகள் அனைத்தையும் ஆறு நாட்களில் படைத்தார். கடவுள் படைத்த அனைத்தும் அழகானவை எனவும் திருவிவிலியத்தில் எழுதப்பட்டுள்ளது.
- மேற்படி கதையிலிருந்து வாய்மொழி வினாக்கள் சிலவற்றை வினவுங்கள்.

**படிமுறை 4**

- கடவுள் படைத்த உலகம் குறித்த பாடல் ஒன்றைப் பாடுங்கள்.
- கடவுள் படைத்த உலகத்துக்கும் அதிலிருந்து கிடைக்கும் பயன்களுக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்கள் 3 இற்கு பதிலளிப்பர். | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்கள் 2 இற்கு பதிலளிப்பர். | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்கள் 1 இற்கு ஒரு மாணவரின் துணையுடன் பதிலளிப்பர். | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்களுக்கு பதிலளிக்க முடியாத நிலையில் இருப்பர். |
| 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் எனக் கூறுவர். | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் எனக் மேலும் கூறுவர். | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் என ஒரு மாணவரின் துணையுடன் கூறுவர். | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் எனக் கூற முடியாத நிலையில் இருப்பர். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# பாடம் 2 - சமாதானத்தின் மகன் இயேசு

இயேசு சமாதானத்தின் மகனாக உலகத்தில் தோன்றிய முறைகளை அறிந்து கொள்வது இந்த பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு / சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்திலுள்ள உபதேசக் காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பர். | கடவுளின் சிரேஷ்டத்துவம் | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுப்பர். |
| | | 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் லூக்கா 1 26-38 மாட்டுத் தொழுவம் ஒன்றை ஆக்குவதற்கு தேவையான வைக்கோல் / துணி / கடதாசி, மாட்டுத் தொழுவத்தின் உருவப் படம்.



**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1 - இயேசுவின் பிறப்பை பாத்திரமேற்று நடிப்பர்**

**பாத்திரமேற்று நடிப்பதற்கான முன் ஆயத்தம்**

- கிறிஸ்துவின் பிறப்பை நடித்துக் காட்டுவதற்கு பொருத்தமான பாத்திரங்களை மாணவரிடையே பகிர்ந்து வழங்குங்கள். (மரியாள், யோசேப்பு, இடையர், ஞானிகள், வானதூதர்)
- தமது பாத்திரங்களுக்குப் பொருத்தமான ஆடைகளைக் கொண்டு வருமாறு மாணவரிடம் முன்கூட்டியே அறிவுறுத்துங்கள்.
- பரிசுத்த நகரமாம் பெத்தகேம் என்ற பாடல் / வேறு ஏதேனும் கிறிஸ்து பிறப்பு பாடலை பாடுவதற்கு பயிற்சி வழங்குங்கள்.

**படிமுறை 1**

- பாடலைப் குழுவினராகப் பாடுவதற்கு அல்லது ஒலிப்பதிவு நாடாவைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அப்பாடலை பாடும் போது அப்பாத்திரம் ஏற்று நடிப்பதற்கு சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாட்டுத் தொழுவத்தில் மரியா, யோசேப்பு, இயேசு, தீவனத் தொட்டி ஆகியவற்றின் உருவங்களை வைத்தல். பாடலில் குறிப்பிட்டவாறு இடையரும் ஞானிகளும் வந்து இயேசுவைப் பணிந்து கொள்வதை நடித்தல்.
- மாணவர் கைநூலில் உள்ள செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

**படிமுறை 2**

- இயேசுவின் பிறப்பிற்கு ஏற்ப கீழ தரப்பட்ட வேதப் பகுதியை மாணவர்கள் கேட்கும் வண்ணம் வாசியுங்கள். லூக்கா 1:26-38
- இயேசுவின் பிறப்பு குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

கலந்துரையாடலில் பின்வரும் கருத்துக்கள் வெளிப்பட இடமளியுங்கள்.

- இயேசு, இறைமகன் என வலியுறுத்துங்கள்
- மரியாளின் மகனாக இயேசு இவ்வுலகில் பிறந்தார் எனவும் அவர் சமாதான குமாரன் எனவும் அவர் தூய்மையானவர் எனவும் எடுத்துக் கூறுக.

  வானதூதர் அவரிடம் “தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக் குழந்தை இறைமகன் எனப்படும்.” (லூக்கா 1:35)

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 5 இணைப் புகளை சரியாக இணைப்பர். | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 3 இணைப்புக்களை சரியாக இணைப்பர். | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 2 இணைப்புக்களை சரியாக இணைப்பர். | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 1 இணைப்பை சரியாக இணைப்பர். |
| 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதி ரிகளைக் கூறுவர். | 2.3.1 | இயேசு சமாதானத்தின் மகன் எனக் கூறுவர். | இயேசு சமாதானத்தின் மகன் என மேலும் கூறுவர். | இயேசு சமாதானத்தின் மகன் என ஒரு மாணவரின் துணையுடன் கூறுவர். | இயேசு சமாதானத்-தின் மகன் எனக் கூற இடர்படுவார். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# பாடம் 3 - தூய ஆவியின் வருகை

தூயாவிளின் வருகையில் இயேசுவின் வாக்கு பெந்தகொஸ்தே நாளில் நிறைவேற்றப்பட்டது என்பதை அறிந்து நிகழ்வை உறுதிப்படுத்தி தூயாவியானவர் எப்போதும் எங்களுடன் வாசம் செய்கின்றார் என்பதை அறிந்து கொள்வது இந்த பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு / சமயம் சார்ந்த கதைகள் மற்றும் திருவிவிலியத்-திலுள்ள கதைகள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பர். | தூய ஆவியானவரின் சிரேஷ்டத்துவம் | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுப்பர். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் தி.ப. 2 : 1- 4
- பெந்தகொஸ்தே நாள் நிகழ்வின் படங்கள். நிறப் பென்சில், A4 தாள், கத்தரிக்கோல், பசை, பிரிஸ்டல் மட்டை, மின் விசிறி, இணைப்பு 1 உம் 2 உம்

**ஆசிரியருக்கான குறிப்பு:**
மாணவர் கைநூலில் பக்கம் 7 - **“அதனால் நாம்”** என்ற பகுதி நீக்கப்பட வேண்டும்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- கிறிஸ்தவர் நாம் கொண்டாடும் விழாக்களை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விழாக்கள் குறித்து மாணவரின் கருத்துக்களை வினவுங்கள்.

- வகுப்பறைக்குள் வீசும் காற்றின் அனுபவத்தைப் பெற இடமளியுங்கள்"
- மாணவரின் அனுபவங்களை கலந்துரையாடுங்கள்.

படிமுறை 2

- இணைப்பில் காணப்படும் படத்தை வெட்டி தயாரியுங்கள்.
- மாணவர் படத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு சந்தரப்பம் வழங்குங்கள்.
- மாணவர் பார்த்த விடயங்களை கேட்டறியுங்கள்.
- மாணவரின் கருத்துக்களை வரிசைப்படுத்துங்கள்.
- திருவிவிலியப் பகுதியை உரத்து வாசியுங்கள்"
- செவிமடுத்த திருவிவிலியப் பகுதியை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- காற்றினால் கிடைத்த அனுபவம் மற்றும் திருவிவிலியப் பகுதியின் நிகழ்வு குறித்து மாணவரின் கருத்தக்களை முன்வைக்க இடமளியுங்கள்.

படிமுறை 3

- மீண்டும் பிள்ளைகள் படத்தை ஆராய்ந்து பார்க்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலந்துரையாடலுக்குப் பின்னர் படத்துடன் தொடர்பான திருவிவிலியப் பகுதியிலிருந்து பின்வரும் வாய்மொழி வினாக்களை மாணவரிடன் வினவி விடைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

1. சீடர்கள் கூட்டம் கூடியிருந்த இடம் எது?
2. அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்.
3. அப்போது இடம் பெற்றது என்ன?

மேற்படி கருத்துக்கள் வெளிப்படுமாறு மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டவாறு சிததிரம் வரைந்து வகுப்பறையில் முன்வையுங்கள்.

படிமுறை 4

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் படத்தை நிறம் தீட்டுவதற்கு உதவி செய்யுங்கள்.

படிமுறை 5

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் படத்தை வெட்டி ஒட்டி நிறைவு செய்வதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு ஏற்ப நிறைவு செய்ய மாணவருடன் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

கணிப்பீடு:

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 | பெந்தகோஸ்-தே நாள் நிகழ்வுகளை சரியாகக் கூறுவர். | பெந்த கோஸ் - தே நாள் நிகழ்வுகளை ஓரளவு சரியாகக் கூறுவர். | பெந்தகோஸ்-தே நாள் நிகழ்வுகளை சக மாணவரின் துணையுடன் கூறுவர். | பெந்தகோஸ்-தே நாள் நிகழ்வுகளை சரியாகக் கூற இடர்படுவார். |

**இணைப்பு 01**








**இணைப்பு 02**

**நிறம் தீட்டுவோம். வெட்டுவோம். ஒட்டுவோம். நெற்றிப் பட்டம் செய்வோம். அணிவோம்.**



**தூய ஆவியானவர் உங்களிடம் வரும்போது நீங்கள் வல்லமை பெறுவீர்கள்.**

**ஆசிரியருக்கான ஆலோசனை -**

- தீச்சுடரை நிறம் தீட்டுங்கள்.
- நெற்றிப்பட்டத்தை பிரிஸ்டல் மட்டையில் ஒட்டுங்கள்.
- பின்வருமாறு தீ சுடரை staple செய்யுங்கள் அல்லது இளாஸ்டிக் பட்டி பயன்படுத்துங்கள்.



# எண்ணக்கரு - சமூக, கலாசார நல்லிணக்கம்
# பாடம் 4 - இது எமது ஆலயம்

| கிறிஸ்தவ சமயத்தின் புனித தலம் ஆலயம் என்பதை அறிந்து ஆலயம் செல்லும் போது பொருத்தமான ஆடை ஆபரணங்கள் அணிந்து மற்றும் சம்பிரதாயக் கொள்கைகளைப் பின்பற்றி பிறருடன் ஒத்துழைப்புடனும் மரியாதையுடனும் செயற்பட்டு தேவையான செயல் அறிவைப் பெற்றுக் கொடுத்தல் இந்தப் பாடத்தின் பிரதான நோக்கம் ஆகும். |
|---|

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 3. சமய வணக்கத் தலங்களை இனங்கண்டு அவை பற்றி அறிந்து அங்கு கௌரவமான முறையில் நடந்து கொள்வார். | இது எமது ஆலயம் | 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்வார். | 3.2.1 சமய அறநெறிக்கு ஏற்ப நடத்தையை மேற்கொள்ளல். |
| | | 3.3 பொருத்தமான ஆடையணிகளை அணிந்து கண்ணியமான முறையில் உரையாடலைக் கையாள்வார். | 3.3.1 சரியான முறையில் செம்மையாக உரையாடுதல்.<br><br>3.3.2 உடல் அவையவங்களை உரியவாறு பயன்படுத்தல். |

**கற்றல் வளங்கள்:**

- ஆலயம் கொண்டு செல்வதற்கு தேவையான பொருட்கள்
- பாடசாலை காலை வழிபாட்டுக்கு அவசியமான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**நாம் ஆலயம் செல்வோம்**

**ஆலயம் செல்வதற்கு முன்னர் ஆயத்தம்**

- அதிபருடன் கலந்துரையாடி ஆலயம் செல்லும் பயணத்தை ஒழுங்கு செய்யுங்கள்.
- ஆலயத்துக்கு மாணவரை அழைத்து செல்லும் நாளை அருட்தந்தை / அருட்பணியாளருக்கு அறிவித்து அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்.
- ஆலயம் செல்வதற்கு பொருத்தமான ஆடையில் வருமாறு மாணவருக்கு அறிவுரை வழங்கி அதை குறித்து பெற்றோருக்கும் அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- ஆலயத்துக்கு செல்லும் முன்தினம் ஆலயத்தில் நடந்து கொள்ளும் விதி முறைகளை (அமைதி நிலை) அறிவுறுத்துங்கள்.

- சரியான முறையில் ஆலயத்திலிருந்து புறப்பட்டு வெளியே செல்லுங்கள்.

**ஆலயம் சென்ற பின்னர்**

**படிமுறை 1**

- ஆலயத்தின் நுழைவாசலில் பாதணிகள்/ தொப்பிகளைக் கழற்றிவிட்டு உள்ளே செல்லுமாறு அறிவுறுத்துக.
- ஆலயத்துக்குள் அமைதியாகச் சென்று அமருவதற்கு வழிகாட்டுங்கள்.
- எப்போதும் ஆசிரியர் முன்மாதிரியாக நடந்து கொள்ளுங்கள்.
- பாடசாலையில் நினைவூட்டியபடி ஆலயத்திநுள் அமைதியைப் பேண மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- பாடல்கள் பாடும் போது அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து எழுந்து பாடல் பாடி துதி செலுத்த ஆலோசனை வழங்குங்கள்.
- விண்ணப்பங்களில் கலந்து கொள்ளும் விதத்தை அறிமுகம் செய்யுங்கள்.
- விண்ணப்பம் செய்யும் போது முழங்காலில் அமர்ந்து இரு கைகளையும் கூப்பி கண்களை மூடி விண்ணப்பம் செய்யுமாறு ஆலோசனை வழங்குங்கள்.
- விண்ணப்பத்தின் முடிவில் ஆமென் கூறுவதற்கு நினைவுபடுத்துங்கள். ஆசிரியர் உரத்து ஆமென் எனக் கூறுங்கள்.
- சிறு அருளுரை / இறைசெய்தி அவதானத்துடன் செவிமடுக்க அறிவுறுத்துங்கள்.
- விண்ணப்பம் செய்த பின்னர் அமைதியாக ஆலயத்திலிருந்து புறப்பட்டு செல்லுமாறு வழியுறுத்துங்கள்.

**படிமுறை 2**

- ஆலய அனுபவங்களை கூறுவதற்கு மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆலயத்தில் செய்யக்கூடாத செயல்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறை களுக்கு ஏற்ப நடந்து கொள்வார். | 3.2.1 | ஆலயத்தில் துதியுடன் பாடல்களைப் பாடுவர். | ஆலயத்திற்கு வரும் பிள்ளையுடன் சேர்ந்து பாடல்களைப் பாடுவர். | ஆலயத்தில் துதியுடன் பாடல்களைப் பாடுவதற்கு தயக்கம் காட்டுவர். | துதி செலுத்தி பாடல்கள் பாடத் விருப்பம் காட்ட மாட்டார்கள். |
| 3.3 பொருத்தமான ஆடையணி-களை அணிந்து கண்ணியமான முறையில் உரையாட லைக் கையாள்வார். | 3.3.1<br><br>3.3.2 | விண்ணப் பத்தின் முடிவில் ஆமென் எனக் கூறுவர். | விண்ணபபத்-தின் முடிவில் ஆமென் என பொதுவாகக் கூறுவர். | விண்ணப்பத்-தின் முடிவில் ஆமென் கூறுவதற்கு தயக்கம் காட்டுவர். | விண்ணபப-த்தின் முடிவில் ஆமென் கூற மாட்டார்கள். |

## எண்ணக்கரு - சூழல் நேயம்

## பாடம் 5 உலகத்தைப் பாதுகாப்போம்

| |
|---|
| கடவுள் படைத்த அழகான உலகத்தைப் பாதுகாத்து ” விருத்தி செய்து அதன் பயன்களை பயன்படுத்த ஈடுபடுத்தல் இப் பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 8. தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்காகச் செயலாற்றுவார். | கடவுளின் அழகிய உலகம் | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல். |
| | | 8.2 எமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்.<br>8.1.2 ஆக்கபூர்வமான திறன்<br>8.2.3 உபகரணங்கள் பயன்பாடு<br>8.2.4 மதிப்பளித்தல். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் தொ.நூ.1:28-29, பாடத்துக்கு பொருத்தமான படங்கள்
- வெளியே வீசி எறியப்படும் கோப்பை ஒன்றில் செடி நடுவதற்கு அவசியமான பொருட்களை ஆயத்தம் செய்து கொண்டு வாருங்கள். அல்லது அவ்வாறான படத்தைக் காட்டுங்கள்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

**(“படைப்பின் கடவுள்” என்ற கடந்த பாடத்தை நினைவுறுத்தி கலந்துரையாடுங்கள்.)**

- உதாரணமாக, கடந்த பாடத்தில் படித்த உலகத்தின் படைப்புக்களைப் படைத்தவர் யார்? கடவுள்

  **(சுற்றாடலின் அழகு, பூக்களின் நிறங்கள், இலை வடிவங்கள், பழங்கள், கீரை வகைகள், குருவிகளின் ஒலி, பறக்கும் பறவைகள் போன்றனவைகளைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள். அல்லது படங்களைக் காட்டுங்கள்.)**

படிமுறை 2

- மாணவர் பார்த்தவைகள், கேட்டவைகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- அவைகளின் அழகு அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி குறித்து கலந்துரையாடுங்கள்.
- மனிதன், தான் பெற்றப் படைப்பை பராமரித்து அதை முறையாகப் பயன்படுத்தும் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்தார். இது திருவிவிலியத்தில் தொ.நூ.1:28-29, குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆசிரியர் இத் திருவிவிலியப் பகுதியை உரத்து வாசிக்கவும்)

**கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி**

**பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்.**

**அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்.**

**கடல் மீன்கள் வானத்துப் பறவைகள்**

**நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன**

**அனைத்தையும் ஆளுங்கள் என்றார்.**

**அப்பொழுது கடவுள் மண்ணுலகெங்கும் உள்ள**

**விதை தரும் செடிகள் பழமரங்கள் அனைத்தையும்**

**உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்.**

**இவை உங்களுக்கு உணவாகட்டும்."**

படிமுறை 3

- உரையாடல் மூலம் கட்டியெழுப்புக.
- மனிதன், கடவுள் படைத்த அழகிய உலகத்தைப் பாதுகாத்தல் மனிதரின் பொறுப்பு அல்லவா?
- எவ்வாறு நாம் அழகிய உலகத்தைப் பாதுகாத்து எமது கடமைகளை நிறைவேற்றுவது எப்படி?
- சிறுவர் நாம் உலகத்தை பாதுகாப்பதற்கு எங்கள் பங்களிப்பை வழங்க முடியும்.
- இந்த அழகிய உலகத்தை பாதுகாக்க கடவுள் எமக்கு உதவி செய்ய வேண்டும் என மன்றாடுவோம்.

படிமுறை 4

**அழகிய உலகத்தைப் பாதுகாப்பதற்கு பின்வரும் முறைகளைப் பின்பற்றலாம்.**

- எமது வீடு மற்றும் சுற்றுச் சூழலை சுத்தம் செய்வோம்.
- பொலிதீன் பையை பாடசாலைக்கு/ வீட்டிற்கு கொண்டு வருவதை தடை செய்தல்.
- நீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பாவித்தல்.
- உணவை வீணாக்காமல் அளவுடன் பகிர்ந்து உணவருந்தல்.

- தாவரங்களுக்கு நீர் ஊற்றுவதற்கு உதவி செய்தல்.
- சூழலுக்காகப் நன்றி செலுத்தி விண்ணப்பம் செய்தல்

**மாணவர் செயற்பாட்டு புத்தகம் தொடர்பான ஆலோசனை:**

- கடவுள் படைத்த அழகிய உலகத்தின் படத்தைக் காட்டுங்கள்.
- மாணவர் அதேபோன்ற சித்திரத்தை வரைய வழிகாட்டுங்கள்.
- கோப்பையில் நடப்பட்ட செடிகளைக் காட்டுங்கள். அல்லது மாணவருடன் சேர்ந்து தயார் செய்யுங்கள்.
- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் உள்ள பாடல் அல்லது கீழ் வரும் பாடலை அபிநயத்துடன் பாடுங்கள்.

**பாடல்:**

**1. எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் - தேவா**

**என்றென்றும் நான் பாடுவேன்**

**இந்நாள் வரை என் வாழ்விலே**

**நீர் செய்த நன்மைக்கே**

**2. வானாதி வானங்கள் யாவும்**

**அதன் கீழுள்ள ஆகாயமும்**

**பூமியில் வாழ்கின்ற யாவும்**

**கர்த்தா உம்மைப் போற்றுமே**

**3. காட்டினில் வாழ்கின்ற யாவும்**

**கடும் காற்றும் பனித் தூறலும்**

**நாட்டினில் வாழ்கின்ற யாவும்**

**நாதா உம்மைப் போற்றுமே**

**4. நீரினில் வாழ்கின்ற யாவும்**

**நிலத்தின் ஜீவராசியும்**

**பாரினில் பறக்கின்ற யாவும்**

**பரனே உம்மைப் போற்றுமே**

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு பங்களிப்பு வழங்குவர். | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு ஓரளவு பங்களிப்பு வழங்குவர். | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு சிறிதளவு பங்களிப்பு வழங்குவர். | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு பங்களிப்பு வழங்கங்கு வதற்கு இடர்படுவார். |
| 8.2 எமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக் கைகளை மேற்கொள்வார். | 8.2.1<br>8.2.2<br>8.2.3<br>8.2.4 | பாடசாலை சுற்றாடலில் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப் படுத்துவர். | பாடசாலை சுற்றாடலில் ஒரு மாணவரின் துணையுடன் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப் படுத்துவர். | பாடசாலை சுற்றாடலில் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப்படுத்த தயக்கம் காட்டுவர். | பாடசாலை சுற்றாடலில் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப்படுத்த இடர்படுவார். |

## எண்ணக்கரு - கண்ணியம், விழுமியம் மற்றும் இணக்கப்பாடு
## பாடம் 6 - இயேசுவுடன் கதைப்போம்

இயேசு தனது வாழ்வில் விண்ணப்பம் செய்து வாழ்ந்தது போன்று எமது வாழ்வுக்கும் விண்ணப்பம் அவசியம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 6. சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சரியான விதிமுறையையும் உரிய பழக்கவழக்கத்தையும் அவயங்களின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவார். | ஜெப வாழ்வு | 6.1 சமய நிகழ்வுகளில் ஈடுபடும் போது சீரான பழக்கவழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1 உரியவாறு வழிமுறைகளில் ஈடுபடுதல். |
| | | 6.3 சமய நிகழ்வுகளில் ஈடுபடும் போது சரியான அவயங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 உடல் பயன்பாட்டை சீரான முறையில் வெளிகாட்டுவார். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம்
- பாடத்துக்கு பொருத்தமான படங்கள் விண்ணப்பம் செய்யும் படம் மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் உள்ளது.
- விண்ணப்பம் தொடர்பான பாடலை ஆயத்தம் செய்து பாடுங்கள்.
- திருவிவிலியப் பகுதி மாற்கு 6:46

**"அவர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்."**

- இயேசு மலையிலிருந்து விண்ணப்பம் செய்யும் படத்தை காட்சிப் படுத்துங்கள். (படம் மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் உள்ளது.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் படத்தைக் கண்டு பிடிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- படத்தைக் குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அனைத்து மாணவரும் கருத்துக்களை கூறுவதற்கு இடமளியுங்கள்.

- ஆலயத்தில் கரங்களைக் கூப்பி கண்களை மூடி முழந்தாளில் நின்று விண்ணப்பம் செய்ய வேண்டும் என அறிவுறுத்துங்கள்.
- எமக்கு விண்ணப்பம் செய்வதற்கு இடம் அவசியமா?

படிமுறை 2

- திருவிவிலியப் பகுதியை மாணவர்கள் செவிமடுக்கும் வண்ணம் உரத்து வாசியுங்கள்.
- "அவர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்."

(இயேசு மலையிலிருந்து விண்ணப்பம் செய்யும் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.)

(நாம் எமது வாழ்வில் எந்த இடங்களிலிருந்தும் விண்ணப்பம் செய்யலாம் என்பதை அறிவுறுத்துங்கள். அமைதியான மனதுடன் ஆண்டவரிடம் மன்றாடல் செய்யலாம் என்பதை கூறுங்கள். விண்ணப்பம் செய்யும் வழிமுறைகளை சில உதாரணங்களுடன் விளக்கி கூறுங்கள்.)

**உதாரணம்:**

| | |
|---|---|
| வெளியிடம்: | அழகிய உலகத்தைப் படைத்த கடவுளே! உமக்கு நன்றி. |
| பஸ் பயணத்தில்: | பஸ்ஓட்டுநரின் திறமையால் எங்களைக் காப்பாற்றும் கடவுளே! |
| | பஸ் ஓட்டுநரை வழிநடத்தியருளும் கடவுளே! |
| பயணத்தில்: | நாம் பயணம் செயவதற்கு கிடைத்த தருணத்துக்காக நன்றி. |
| | எங்களை பாதுகாத்து வழிநடத்தியருளும். |
| பாடசாலையில்: | எங்கள் நண்பர்களுக்கு உதவி செய்வதற்கு அருள் தாரும். |
| வீட்டில்: | அம்மா அப்பா அனைவருக்கும் கீழ்படிந்து வாழ வரம் தாரும். |

படிமுறை 3

**எமது வாழ்வுடன் விண்ணப்பங்களை இணைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிவுறுத்துங்கள்.**

1. முதலாவது துதி செலுத்தல்
2. எமது தவறுகளுக்கு கடவுளிடம் மன்னிப்பு கேட்டல்.
3. பிரச்சனைகளில் இருந்து பாதுகாப்பு வழங்க வேண்டுதல்.
4. எமது நாளாந்த தேவைகளைக் கேட்டல்.
5. நோயாளருக்காக மன்றாடுதல் செய்தல்.

படிமுறை 4

**மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் பாடத்துக்கு பொருத்தமான செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.**

**செயற்பாட்டு புத்தகம் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடத்துக்கு பொருத்தமான செயற்பாட்டை கண்டுபிடிக்க வழிகாட்டுங்கள்.
- ‘‘அவர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்.’’

(இயேசு மலையிலிருந்து விண்ணப்பம் செய்யும் படம் செயற்பாட்டு புத்தகத்தில் உள்ளது)

- மாணவர் தமது கைகளை வைத்து அல்லது செயற்பாட்டு புத்தகத்தில் காணப்படும் படத்தை கடதாசியில் ஒட்டி அதில் ‘எனது ஜெபிக்கும் கரங்கள்’ என எழுதி நிறம் தீட்ட உதவி செய்யுங்கள்.
- விண்ணப்பம் தொடர்பான பாடலை ஆயத்தம் செய்து பாடுங்கள்.

**கணிப்பீடு:**

| **மதிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு நியம இல** | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | | **பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார்** | |
|---|---|---|---|---|---|
| | | **நிலை 4** | **நிலை 3** | **நிலை 2** | **நிலை 1** |
| 6.1 சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சீரான பழக்கவழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1 | விண்ணப்பம் செய்வர். | விண்ணப்பம் செய்வதற்கு முயற்சிப்பார். | ஒரு மாணவரின் துணையுடன் விண்ணப்பம் செய்வர். | விண்ணப்பம் செய்வதற்கு தயக்கம் காட்டுவார். |
| 6.3 சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சரியான அவயங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 | கைளைக் கூப்பி கண்களை மூடி முழந்தாளில் இருந்து சரியான நிலைகள் 3 காட்சிப்படுத்துவர். | கைளைக் கூப்பி கண்களை மூடி முழந்தாளில் இருந்து சரியான நிலைகள் 2 காட்சிப்படுத்துவர். | கைளைக் கூப்பி கண்களை மூடி முழந்தாளில் இருந்து சரியான நிலைகளை 1 காட்சிப்படுத்துவர். | கைளைக் கூப்பி கண்களை மூடி முழந்தாளில் இருந்து சரியான நிலைகளைக் காட்சிப்படுத்த இடர்படுவார். |

## எண்ணக்கரு - கண்ணியம், ஒழுக்கம் மற்றும் இணக்கப்பாடு
## பாடம் 7 கடவுள் அருளிய எனது குடும்பம்

தமது குடும்ப அங்கத்தவர்களை இனம் கண்டு அவர்கள் காட்டும் அன்பையும் பாதுகாப்பையும் அறிந்து அவர்களுக்கு செய்யக் கூடிய நற்செயல்களை உணர்ந்து நல்ல பிள்ளையாக செயற்பட்டு வாழ பழக்கப்படுதல் இந்த பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 7. ஒரு சிறந்த பிள்ளை என்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | வீட்டில் குடும்பம் | 7.1 ஒரு சிறந்த பிள்ளை என்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 சிறப்பான நற்பண்புகளை அறிந்து அவற்றை இனங்காணல். |
| | | 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்ற வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 7.3.1 சீரான நடத்தையை கடைபிடித்தல். |

**கற்றல் வளங்கள்:**

- பெற்றோரும் பிள்ளைகளும் மகிழ்வுடன் இருக்கும் படம்.



**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- அம்மா அப்பா பிள்ளைகள் மகிழ்வுடன் கதைத்துக் கொண்டிருக்கும் நிழற்படத்தைக் காட்டி நாம் வாழும் எமது குடும்பம் குறித்து கலந்துரையாடுங்கள்.
- பெற்றோரைப் பாதுகாத்தல், அவர்களிடம் அன்பு காட்டுதல், அர்ப்பணிப்புடன் செயற்படுதல் போன்றனவைகளை கலந்துரையாடுங்கள்.

- பெற்றோர் எங்களைப் பாதுகாத்து எமது தேவைகளை எல்லாம் நிறைவேற்றுகின்றனர் என்பதை விமர்சித்து அறியுங்கள்.
- திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுளின் கட்டளையான பெற்றோரை மதித்து வாழ்தல் எமது பொறுப்பு என்பதை விபரமாக எடுத்துக் கூறுங்கள்.
- சிறு வயது முதல் பெற்றோருக்கு கீழ்படிந்து வாழும் முறைகளை விமரிசித்து அறியுங்கள்.

படிமுறை 2

- அன்பையும் பாதுகாப்பையும் வழங்கும் எமது சகோதரர் மற்றும் சகோதரிகள் கடவுளால் அருளப்பட்ட கொடைகள் என்பதை அறிவித்து கலந்துரையாடுங்கள்.
- தமது சகோதரர் சகோதரிகளிடம் உதவி கேட்கும் சந்தர்ப்பங்களை கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.
- அந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சகோதரர் சகோதரிகளின் அன்பையும் வழங்கும் பாதுகாப்பையும் மதித்து வாழ பழக்கப்படுத்துங்கள்.
- தமது சகோதர சகோதரிகளுக்கும் உறவினர் சகோதர சகோதரிகளுக்கும் செய்யக்கூடிய உதவிகளை கலந்துரையாடுங்கள்.

படிமுறை 3

- பெற்றோருக்கும் சகோதரர் சகோதரிக்கும் நன்றி செலுத்தும் விண்ணப்பம் ஒன்றை கற்பிக்கவும்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 7.1 ஒரு சிறந்த பிள்ளை என்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகள் 3 கூறுவர். | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகள் 2 கூறுவர். | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகள் 1 கூறுவர். | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகளைக் கூறமாட்டார்கள். |
| 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்ற வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 7.3.1 | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகள் 3 கூறுவர். | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகள் 2 கூறுவர். | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகள் 1 கூறுவர். | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகளைக் கூறமாட்டார்கள். |

# எண்ணக்கரு - பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை
# பாடம் 8 - கடவுளை வணங்குவோம். கடவுளின் வார்த்தைகளை வாசிப்போம்.

நாளாந்த வாழ்வின் நடத்தை தொடர்பாக ஆரோக்கியமான சுகாதார பழக்க வழக்கங்ளைக் பின்பற்றுவர்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பார். | காலையில் கடவுளை வணங்குவோம். கடவுளின் வார்த்தைகளை வாசிப்போம். | 10.1 சிறந்த நடத்தைகளை வரிசை கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 ஒழுங்கு முறையில் கூறுதல். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம்
- சிறுபிள்ளை முழங்காலில் நின்று விண்ணப்பம் செய்யும் படம் (மாணவர் செயற்பாட்டு புத்தகத்தில் உள்ளது.)
- 1 தெசலோனிகக்ர் 5:17-18 கூதிருப்பாடல் 119:115" எபேசியர் 6:2

  "இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்."

  "எல்லா சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள்."

  "உங்கள் பெற்றோருக்கு கீழ்படியுங்கள்."

- பாயில் அல்லது தரையில் அமருவதற்கு வழிசெய்யுங்கள்.
- இனிய ஓசை தரும் கருவிகள் பயன்படுத்துங்கள். (வாய் வாத்தியம் (Mouth organ), புல்லாங்குழல்)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- மனதை இலகுபடுத்தும் செயற்பாடு தொடர்பாக வகுப்பறையில் ஆலயத்தில், வெளியான இடத்தில் தியான காலத்துக்கு இடத்தை ஆயத்தம் செய்யுங்கள்.
- இனிய ஓசையில் மாணவரின் அவதானத்தை ஈடுபடுத்துங்கள். (மாணவரின் அவதானத்தை ஆசிரியரில் வைத்துக் கொள்ளுங்கள்.

உடலை இலகுவாக வைத்து கணகளை மூடி இருக்கும் வண்ணம் அறிவுறுத்துங்கள்.

- இப்போது உங்கள் மனதை மூச்சு விடும் திசைக்கு கொண்டு வாருங்கள்.
- மூக்கு துவாரங்களில் மூச்சானது மேலும் கீழும் செல்லும் வண்ணமாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

- வேறு எவைகளையும் சிந்திக்காது மூச்சு எடுத்தலை மட்டும் நினைவுபடுத்துங்கள்.
- (2 அல்லது 3 நிமிடம் மூச்சை மேலும் கீழும் செய்வதற்கு ஆசிரியரின் அறிவுறுத்தல் அவசியம். ஒலி நாடாவை நிறுத்துங்கள். கண்களை திறவுங்கள்.)
- மாணவர் உணர்ந்தவைகளை கலந்துரையாடுங்கள்.

படிமுறை 2

- **கடவுளை வணங்குவோம்.**

(நல்மனதுடன் நம் கடவுளை வழிபட ஆயத்தமாகுவோம். மாணவர் கண்களை மூடி இருக்கும் வேளையில் நாளாந்த வாழ்வின் நடத்தைக் கோலத்தை நேரிமையான நடத்தை மற்றும் எளிமையான வார்த்தைகளைக் கேட்பதற்கான சில உதாரணங்கள் பின்வருமாறு:

- மீண்டும் இனிய ஒலி நாதத்தைக் கேட்டவாறு கண்களை மூட இடமளியுங்கள்.
- இயேசு எங்களுக்கு கூறியதற்கு ஏற்ப அயலவர்களுக்கு அன்பு காட்டுவோம். எமது நண்பர்களுக்கு உதவி செய்வோம்.
- பெற்றோருக்கு கீழ்படிவோம். வயோதிபருக்கு கீழ்படிவோம். குாலையில் எழுந்து ஆலயம் செல்வோம்.
- கடவுளை வழிபடு**வோம்.**
- இடைவிடாது இறை வேண்டுதல் செய்யுங்கள். நாம் விண்ணப்பம் செய்யும் போது முழந்தாளில் நின்று இரு கரங்களையும் கூப்பி கண்களை மூடி வேண்டுதல் செய்வோம்.
- இயேசு உங்களுடன் இருக்கின்றார். அவர் உங்களை நேசிக்கின்றார்.
- நாம் ஓய்வுநாள் பாடசாலை (வேதாகம பாடசாலை) சென்று திருவிவிலியத்தை வாசிக்க பழகுவோம்.
- இயேசு கற்பித்த கதைகளைக் கேட்டு நல்லவைகளை செய்து வாழப் பழகுவோம்.
- கண்களை திறப்பதற்கு இடமளியுங்கள்.

படிமுறை 3

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் பாடத்துக்குப் பொருத்தமான படத்தைக் கண்டுபிடிக்க இடமளியுங்கள்.
- மாணவர் தமது கருத்துக்களை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விண்ணப்பம் செய்யம் படத்தைக் காட்டுங்கள். நாமும் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்துங்கள்.
- திருவிவிலிய வார்த்தைகள் சில கேட்பதற்கு இடமளியுங்கள்.
    - இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்.
    - அயலவரிடம் அன்பு காட்டுங்கள்
    - பெற்றோருக்கு கீழ்படிவோம்.
    - மாணவருடன் சேர்ந்து வாசியுங்கள்.

படிமுறை 4

**மாணவர் செயற்பாட்டுப் புத்தகம் தொடர்பான ஆலோசனை:**

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் பாடம் தொடர்பான செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- படங்களைப் பார்த்து ஆசிரியருடன் சேர்ந்து வாசியுங்கள்.

உதாரணமாக -

- இடைவிடாது (இறைவனிடம்) வேண்டுங்கள்.
- (வயோதிபருக்கு) கீழ்ப்படிவோம்.
- (பிறரில்) அன்பு காட்டுவோம்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 10.1 சிறந்த நடத்தைகளை வரிசை கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் எனக் கூறுவர். | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் என ஓரளவேனும் கூறுவர். | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் என ஒரு பிள்ளையின் உதவியுடன் கூறுவர். | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் என கூற இடர்படுவார். |

**உள்ளடக்கம்**
**இரண்டாம் தவணை**

**எண்ணக்கரு - நடத்தை அபிவிருத்தி**


பாடம் 01 கருணை
பாடம் 02 அன்பு
பாடம் 03 மகிழ்ச்சி எனும் பரிசு


**எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு**


பாடம் 04 திருவிவிலியம் எமது புனித நூல்


**எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு**


பாடம் 05 இறைவனிடம் பேசுவோம்


**எண்ணக்கரு - சூழல் நேயம்**


பாடம் 06 நாம் வாழும் உலகை பாதுகாப்போம்.
பாடம் 07 பகிர்தல்


**எண்ணக்கரு - பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை**


பாடம் 08 அர்பணிப்புள்ள மனதுடன் இயேசுவிடம் நெருங்குவோம்.

# எண்ணக்கரு - நடத்தை அபிவிருத்தி

## கருணை

திருவிவிலியம் மூலம் தமது பண்புகளை மேம்படுத்தவும் கடவுளின் குணங்களை அறிந்து கொள்வதே இப்பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2. சமய தோற்று விப்பாளர்கள்/ படைப்பாளர் குறித்த கதைகளையும் போதனைகளையும் கவிதை வடிவில் நடத்தை விருத்திக்கு பொருத்தமான சிறப்பான பண்புகளைக் கூறுவர். | கடவுளின் குணம் | 2.2 சமயக் கதைகளை கேட்டு சமய அறிஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவர். | 2.2.1 விசேட குணங்களைக் கூறுவர். |
| | | 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடை-த்த முன்மாதிரி-களைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரி-களைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலியம்
- படம் ஒன்றினை கட்டியெழுப்ப தேவையான நிறக் கடதாசிகள்.
- பசை" கத்தரிக்கோல்" பென்சில்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு**

**படிமுறை 1**

- உலகப் படைப்பைப் பற்றி முதலாம் தவணையில் படித்தவற்றை நினைவுபடுத்திய பின் மாணவர்களின் அறிவை கணிப்பபீடு செய்ய வினாக்களை வினவி கலந்துரையாடுக.

  உதாரணம் : உலத்தை படைத்தவர் யார் எனக் கூறிஇ கடவுள் எத்தனை நாட்களில் உலகை படைத்தார்? (ஆறு நாட்களில்.)

  ஆறாவது நாளில் எதைப் படைத்தார்? (உயிரினங்கள் - வேவ்வேறு வகையான உயிரினங்களைப் படைத்தார். அடுத்ததாக மனிதனைப் படைத்தார்.)

மனிதனை யாரைப் போல படைத்தார்? (கடவுளின் சாயலில்.)

அன்பு, இரக்கம், தைரியம், போன்ற குணங்களை மாணவர்கள் புரிந்துகொள்ள உதவக்கூடிய உதாரணங்களில் காட்டப்பட்டுள்ளபடி வினாக்களை வினவி கலந்துரையாடுக.

உதாரணம்: சாயலைப் போல எனக் கூறுவது எனது அம்மா, அப்பாவைப் போல, அப்படி தானே? அம்மாவைப் போல எனக் கூறுவது அம்மாவின் தலைமயிர்இ அம்மாவின் முகம், கை, கால் அல்ல.

அப்பாவைப் போல எனக் கூறுவது அப்பாவின் தலைமயிர், அம்மாவின் முகம், கை, கால் அல்ல.

அம்மாவின் அப்பாவின் குணம் என்ன? அன்பு, இரக்கம், தைரியம், முயற்சி. (இதனை எளிமையாக விளக்குக.)

கடவுளின் சாயல் எனக் கூறுவதுஇ அவரின் குணங்களுக்கு ஏற்ப எம் ஒவ்வொருவரையும் படைத்து இருப்பதனால்.

கடவுள் அந்த அளவிற்கு மனிதனுக்கு கருணை காட்டுகிறார் என்பதை அறிந்து கொள்வோம்.

**படிமுறை 2**

- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 1 : 27 வசனத்தை ஆசிரியர் உரத்து வாசிக்கவும்.
- கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.
- ஆணின் பெயர் நினைவில் உண்டா? “ஆதாம்”
- பெண்ணின் பெயர் யாருக்கு நினைவில் இருக்கிறது? “ஏவாள்”

**படிமுறை 3**

- மேலே உள்ள திருவிவிலியப் பகுதியைப் பயன்படுத்தி “ஆதாம்” மற்றும் “ஏவாள்” க்கு “தோல்” ஆடை அணிவித்த கதையில் கடவுளின் கருணையும் அன்பும் தெளிவாகத் தெரிகிறது என்பதை மாணவர்களுக்கு மேலும் விளக்குக.
- நம் எல்லோருக்கும் கருணையும் அன்பையும் காட்டும் கடவுள் “ஆதாம்” மற்றும் “ஏவாள்” க்கு “தோல்” ஆடையை அணியச் செய்தார் என திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கூறுங்கள்.
- தொடக்கநூல் 3 : 21 வசனத்தை மாணவர்களுடன் சேர்ந்து வாசிக்கவும்.

  “ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்கள் அணியச் செய்தார்”

மாணவ கைநூலிற்கான ஆலோசனை :

- பாடத்திற்கு ஏற்ற செயற்பாடு ஒன்றை கண்டறிய வழிப்படுத்துக.
- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 1 : 27 வசனத்தை ஆசிரியருடன் சேர்ந்து வாசித்தல்.
- "ஆதாம்" மற்றும் "ஏவாள்" இன் படங்களுக்கு உலர்த்திய வாழையிலையை கிழித்து ஆடையைப் போல ஒட்ட வழிகாட்டுக.
- பிள்ளைகளுடன் இணைந்து பாடலொன்றின் பகுதியைப் பாடுதல். (மாணவர் கைநூலில் உள்ளது.)

கடவுள் எம்மை நோக்கி

கருணை குணம் காட்டி

எம் தைரியம், பெலத்தை

மகிழ்வுடன் பகிர்ந்தளித்து

இனிய காலம் கடத்திடுவோம். //

**கணிப்பீடு :**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகளை கேட்டு சமய அறிஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவர். | 2.2.1 | கடவுள் கருணையுள்ளவர் என அறிவித்தல். | கடவுள் கருணையுள்ளவர் என ஓரளவுக் கேனும் அறிவித்தல். | கடவுள் கருணையுள்ளவர் என மற்றுமொறு மாணவரின் உதவியுடன் கூறுதல். | கடவுள் கருணையுள்ளவர் எனக் கூறுவதற்கு இடறலடைதல். |
| 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரி களைக் கூறுவர். | 2.3.1 | கடவுளின் கருணையை நமக்குள் வளர்துக் கொள்ள வேண்டும் எனக் கூறுதல். | கடவுளின் கருணையை நமக்குள் வளர்துக் கொள்ள வேண்டும் என ஓரளவுக் கேனும் கூறுதல். | கடவுளின் கருணையை நமக்குள் வளர்துக் கொள்ள வேண்டும் என மற்றுமொரு மாணவரின் உதவியுடன் கூறுதல். | கடவுளின் கருணையை நமக்குள் வளர்துக் கொள்ள வேண்டும் என இடலறடைதல். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

## அன்பு

| |
|---|
| அன்பு இயேசு கிறிஸ்துவுக்குள் காணப்படும் ஒரு உன்னதமான குணம் என தெரிந்துகொண்டு அந்த குணத்தை தமக்குள் வளரச் செய்து இயேசுவுக்கு பிரதி அன்பை காட்டி ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டுதலைத் தூண்டுவதே இந்த பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2 சமய தோற்று விப்பாளர்கள்/ படைப்பாளர் குறித்த கதைகளையும் போதனைகளையும் கவிதை வடிவில் நடத்தை விருத்திக்கு பொருத்தமான சிறப்பான பண்புகளைக் கூறுவர். | இயேசுவின் குணாதிசயம் | 2.2 சமயக் கதைகளை கேட்டு சமய அறிஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவர். | 2.1.1 சமயக் கதைகளைக் கேட்டல். |
| | | 2.3 3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியம் மாற்கு 10 : 13-16
- பெனல் அட்டை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01**

- ஆசிரியர் மாணவருடன் நட்புடன் உரையாடி கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்.

  உதாரணம்: நீங்கள் யாரிடத்தில் அதிக அன்பு செலுத்துகிறீர்கள்? (அம்மா, அப்பா அல்லது வேறொருவரின் பெயரைக் கூறலாம்) அதே போல உங்கள் அம்மாஇ அப்பா அதிகம் அன்பு செலுத்துவது யாருக்கு? மாணவர்கள் வெவ்வேறு பதில்கள் முன்வைக்கலாம்.

**படிமுறை 02**

நான் இன்று உங்களுக்கு ஒரு கதை கூறப்போகிறேன் எனக் கூறி மாற்கு 10 : 13-16 இன் சம்பவத்தை கதையைப் போல பெனல் அட்டையில் படங்கள் ஒட்டி மாணவர்களுக்கு விளக்கவும்.

கதையின் பின்னணி

- இயேசு வாழ்ந்த நாட்களில் சமூகத்தில் பிள்ளைகளை விசேடமானவர்கள் என கருதப்படவில்லை.

கதை

- ஒரு நாள் இயேசு தமது சீடர்களுடன் இருந்த வேளையில், சிலர் தமது பிள்ளைகளை இயேசுவின் கைகளை அவர்களின் தலையில் வைத்து ஆசீர்வதிக்கும் படி இயேசுவிடம் அழைத்து வந்தனர்.
- சீடர்கள், பிள்ளைகளை இயேசுவிடம் கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள்.
- இயேசு அதைக் கண்டு கோபம் கொண்டார். சீடர்கள் செய்த செயலை அவர் அனுமதிக்கவில்லை.
- இயேசு சீடர்களுக்கு இவ்வாறு கூறினார். "சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது"
- இயேசு பிள்ளைகளை அரவணைத்து தம் கைகளை வைத்து ஆசி வழங்கினார்.

**படிமுறை 03**

- மாற்கு 10 : 13-16 மாணவருக்கு விளங்கக்கூடிய வகையில் உரத்து வாசிக்கவும்.

**படிமுறை 4**

மேலே கூறிய திருவிவிலிய கதையை வைத்து மாணவரிடத்தில் சிறு வினாக்களை வினவி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.

01. பெரியோர் தம் பிள்ளைகளை யாரிடத்திற்கு அழைத்து வந்தனர்?

02. அவர்கள் பிள்ளைகளை தூக்கி வந்தது எதற்காக?

03. அப்போது நடந்த சம்பவம் என்ன?

04. இயேசு அப்போது என்ன செய்தார்?

**படிமுறை 5**

- இயேசுவின் அன்பு எப்படிப்பட்டது என்பதை நிஜ வாழ்க்கையின் உதாரணங்களைப் பயன்படுத்தி கலந்துரையாடுக.
- அன்று போல இன்றும் இயேசு சிறுவர்களை அன்பு செய்கிறார்.
- அவரின் அன்பிற்கு எல்லை இல்லை.
- இயேசு தம் வாழ்வில் அன்பின் குணங்களை முன்மாதிரியாகக் காட்டி நாம் பிறருக்கு அன்பு செய்ய வேண்டிய விதத்தை கேட்டறியுங்கள்.

**படிமுறை 6**

மாணவர்களுடன் கீழே உள்ள பாடலை அபிநயத்துடன் பாடுங்கள்.

இயேசு உன்னை நேசிக்கிறார்

நானும் உன்னை நேசிக்கிறேன்

அப்படியே ஆகட்டும்.

**கணிப்பீடு :**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகளை கேட்டு சமய அறிஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவர். | 2.1.1 | இயேசு பிள்ளை களை நேசிக்கிறார் எனக் கூறல். | இயேசு பிள்ளை களை நேசிக்கி- றார் எனச் சிறு குறைபா டுகள் உடன் கூறல் | இயேசு பிள்ளைகளை நேசிக்கிறார் என மாண- வர் ஒருவரின் ஆதாரத்துடன் கூறல். | இயேசு பிள்ளைகளை நேசிக்கிறார் என்பதைக் கூறாதிருத்தல். |
| 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரி களைக் கூறுவர். | 2.3.1 | இயேசுவின் அன்பின் முன்மாதி ரியின் படி நாமும் செயற்பட வேண்டும் எனக் கூறல். | இயேசுவின் அன்பின் முன்மா- தி ரியின் படி நாமும் செயற்பட வேண்டும் எனச் சிறு குறைபா டுகள் உடன் கூறல். | இயேசுவின் அன்பின் முன்மாதிரியின் படி நாமும் செயற்பட வேண்டும் என மற்றுமொறு மாணவரின் ஆதாரத்துடன் கூறல். | இயேசுவின் அன்பின் முன்மாதிரியின் படி நாமும் செயற்பட வேண்டும் எனக் கூறத் தவறவிடல். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# மகிழ்ச்சி எனும் பரிசு

நல்ல மதிப்புக்களை உருவாக்கும் தூயாவியை ஒருவரின் வாழ்வில் வரவழைப்பதன் மூலம் தூயாவியின் கனியாகிய மகிழ்ச்சியை தம் வாழ்வின் மூலம் செயற்படும் விதத்தை கற்பதே இப்பாடத்தின் நோக்கம்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2 சமய தோற்று விப்பாளர்கள்/ படைப்பாளர் குறித்த கதைகளையும் போதனைகளையும் கவிதை வடிவில் நடத்தை விருத்திக்கு பொருத்தமான சிறப்பான பண்புகளைக் கூறுவர். | இயேவின் குணாதிசயம் | 2.2 சமயக் கதைகளை கேட்டு சமய அறிஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவர். | 2.1.1 சமயக் கதைகளைக் கேட்டல். |
| | | 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலியம் - கலாத்தியர் 5:22 / பிலிப்பியர் 4: 4
- பரிசு ஒன்றை அழகாக அமைத்துக் கொள்ளவும்.
- பரிசுகளாக பெறும் வெவ்வேறு பொருட்களின் படங்களை தயார்படுத்துக.
- கலர் பென்சில் ஏ4 தாள்.
- பசை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01** -

- எம்மை மிகவும் நேசிப்பது யார்? அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா, ஆசிரியர், நண்பர்கள்.
- அதே போல எம்மை மிகவும் நேசிப்பது "இயேசு கிறிஸ்து" எம்மீது எவ்வளவு அன்பு? அவர் எமக்காக என்ன செய்தார்?
- மன்னிப்பு கொடுத்தார், நல்ல விடயங்களை கற்பித்தார், அன்பு செலுத்தினார், நாம் செய்த தவறுகளுக்கு சிலுவையில் பாடுபட்டார்.

**படிமுறை 02**

- ஆசிரியரிடம் உள்ள ஒரு பரிசை மேசையின் மீது வைக்கவும். அந்த பரிசைப் பற்றி ஆர்வம் ஏற்படுத்தக்கூடியவாறு சில வினாக்களை வினவுங்கள்.

  உதாரணம்: இது என்ன பிள்ளைகளே? எப்படிப்பட்ட பரிசாக இருக்கும்?

- எமக்கு பரிசு கிடைக்கும் போது என்ன தோன்றும்?
- பரிசு என்றால் எமக்கு ஆசை தானே?
- நாம் விரும்பியவை பரிசாகக் கிடைப்பது ஒரு ஆசை.
- நாம் அந்த மகிழ்ச்சியை காண்பிக்க நம் பரிசுகளை பாதுகாப்போம், சுத்தம் செய்வோம், பிறர் அந்த பொருட்களை தொடுவதற்கு நாம் இடமளிப்பதில்லை. அன்பு செலுத்துவோம் என கூறுங்கள்.

**படிமுறை 03**

- மாணவர்களை முன்னே அழைக்கவும். அவ்வாறு கலந்துரையாடலை மேலும் கடடியெழுப்புக.
- பெட்டியின் உள்ளே முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை வைத்து பரிசைப் போல் அமைத்துக்கொள்க.
- ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியே அழைத்து பரிசைப் பார்க்க சந்தர்ப்பமளிக்க.
- இந்தப் பரிசை உங்களுக்கு அம்மா, அப்பா கையில் அனுப்பியது கடவுள்.
- மாணவர் கண்ணாடியினால் முகத்தைப் பார்ப்பர்.
- அதன் போது "நீங்கள் தான் எமக்கு கிடைத்த பெரிய பரிசு. நீங்கள் எமக்கு மிகவும் பெறுமதியான பரிசு. நீங்கள் தான் எமது மகிழ்ச்சி" என்று கூறுங்கள்.

**படிமுறை 04**

- திருவிவிலியத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
- கலாத்தியர் 5 : 22
- ஆனால் தூய ஆவியினால் கிடைக்கும் பலனின் பெயர்: அன்பு, மகிழ்ச்சி போன்றன.
- செயல்நூலில் குறிப்பிட்டுள்ள கொடுத்தல் மற்றும் பெற்றுக்கொள்வது மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை காண்பியுங்கள்.

அபிநயத்துடன் பாடல் ஒன்றைப் பாடுங்கள்.

சந்தோஷம் பொங்குதே //

சந்தோஷம் என்னில் பொங்குதே

இயேசு என்னை இரட்சித்தார்

முற்றும் என்னை மாற்றினார்

சந்தோஷம் என்னில் பொங்குதே

- செயல்நூல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்:
- மகிழ்ச்சி எனும் மரத்தை நிறம் தீட்டுக.
- மகிழ்ச்சி எனும் மரத்திற்குள் ஒட்டுவதற்கு ஆசிரியரிடம் 5 படங்கள் ஆயத்தமாய் இருத்தல் வேண்டும்.

(நண்பர்கள்/ பாடல் பாடுதல்/ முதியோர்/ விளையாடுதல்/ இயேசு)

மகிழ்ச்சி எனும் மரத்தினுள் மேலே கொடுக்கப்பட்ட படங்களை வெட்டி ஒட்ட வழிப்படுத்துக.

**கணிப்பீடு :**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகளை கேட்டு சமய அறிஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவர். | 2.1.1 | மகிழ்ச்சி தூய ஆவியின் கனிகளில் ஒன்று என-க்கூறல். | மகிழ்ச்சி தூய ஆவியின் கனிகளில் ஒன்று என ஓரளவுக் கேனும் கூறல். | மகிழ்ச்சி தூய ஆவியின் கனிகளில் ஒன்று என மற்றுமொரு மாணவரின் உதவியுடன் கூறல். | மகிழ்ச்சி தூய ஆவியின் கனிகளில் ஒன்று எனக் கூறாதிருத்தல். |
| 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரி களைக் கூறுவர். | 2.3.1 | தூயாவீன் கனியான மகிழ்ச்சியை தன் வாழ்விற்கு ஒரு முன்மாதிரியாகக் கொண்டு நடிப்பு மற்றும் பாடு-தலில் ஈடுபடுவர். | தூயாவீன் கனியான மகிழ்ச்சியை தன் வ ாழ்விற்கு ஒரு முன்மாதிரி யாகக் கொண்டு நடிப்பு மற்றும் பாடுதலில் ஓரளவுக்கு ஈடுபடுவர | தூயாவீன் கனியான மகிழ்ச்சியை தன் வாழ்விற்கு ஒரு முன்மாதிரி யாகக் கொண்டு நடிப்பு மற்றும் பாடுதலில் மற்றுமொரு மாணவரின் உதவியுடன் ஈடுபடுவர். | தூயாவீன் கனியான மகிழ்ச்சியை தன் வாழ்வில் காண்பிக்காதி ருத்தல். |

## எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

## திருவிவிலியம் எமது புனித நூல்

கிறிஸ்தவர்களின் புனித நூல் திருவிவிலியம் என்பதை அறிமுகப்படுத்தி அதன் ஒழுங்கமைப்பு பற்றி அறிவை வழங்குவதே இப் பாடத்தின் நோக்கமாகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 1. நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற முக்கியமான சமய வழிபாட்டு ஒழுக்க விதிமுறைகளையும் சமய அடிப்படையில் தமது அறநெறி பற்றிய எண்ணக்க ருக்களையும் இனங்காண்பார். | திருவிவிலியத்தை அறிந்துகொள்ளல் | 1.2 சமயநெறி தொடர்பான விசேட நிகழ்வின் வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.1 விசேட சமய நிகழ்வுகளை இனங்காணல். |
| | | 1.3 சமயநெறி தொடர்புபட்ட பிரதான குறியீடுகள் மற்றும் சின்னங்களை இனங்காண்பார். | 1.3.1 குறியீடுகள், சின்னங்களை இனங்காணல். |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலியம்
- பாடத்திற்கு தொடர்புடைய படங்கள்
- கலர் பென்சில், ஏ4 தாள், கத்தரிக்கோல், பசை, பிரிஸ்டல் அட்டை
- பலகை கீலம் அல்லது 2 குழாய் கீலம்
- துணித்துண்டு

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01**

- திருவிவிலியம் கிறிஸ்தவர் எமது புனித நூல் என்பதை மாணவர்களுடன் கலந்துரையாடுக.


**படிமுறை 02**

- திருவிவிலியத்தின் மூலம் மாணவர்களிடம் சிறு கேள்விகளுக்கு வாய்மொழியாக பதிலளிக்க சந்தர்ப்பம் அளிக்குக.

- இந்நூலில் இருப்பது என்ன?
- இறைவழிநடத்துதல் மூலம் எழுதப்பட்ட இறை வசனம்
- அதில் 2 பகுதிகள் உள்ளன என்பதைத் தெரிவிக்க.
- அவ்விரண்டு பகுதிகளும் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனப்படும்.
- ஒரு நூலினுள் பல புத்தகங்களும் பல கதைகளும் உள்ளன.
- அவை மனிதனால் எழுதப்பட்டதெனினும் இறை ஏவுதலினால் என எடுத்துக்கூறுக.
- பழைய ஏற்பாட்டினுள் கடவுள் உலகை படைத்தல் மற்றும் அவர் செய்த ஏனைய செயல்கள்.
- இயேசுவின் பிறப்பு மற்றும் போதனைகள் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்கூறுக.

**படிமுறை 03**

- திருவிவிலியம் முதன் முதலில் எழுதப்பட்ட மூலம் என்பதை படங்கள் மூலம் காட்டுக.





கற்பாறைகள் 2







சுருள் ஏடுகள்

அவற்றை ஆராய வழிப்படுத்துக.

**படிமுறை 04** -

- துணித்துண்டு அல்லது நீளமான கடதாசியொன்றை பயன்படுத்தி பலகைக் கீலம் அல்லது சிறிய குழாய்த் துண்டினை பொருத்தி ஆசிரியரினால் தயாரித்து மாணவர்களுக்கு காண்பிக்கவும்.
- 2 கற்பாறைகளை வைத்திருக்கும் மோசேயின் படத்திற்கு நிறம் தீட்டுக.
- மாணவர் கைந்நூலில் உள்ள மோசே மற்றும் கற்பாறைகளை நிறம் தீட்ட வழிப்படுத்துக.

கணிப்பீடு

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 1.2 சமயநெறி தொடர்பான விசேட நிகழ்வின் வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.1 | மகிழ்ச்சி தூயாவியின் கனி எனக் கூறல். | மகிழ்ச்சி தூயாவியின் கனி என ஓரளவுக் கேனும் கூறல். | மகிழ்ச்சி தூயாவியின் கனி என மற்றுமொரு மாணவரின் உதவியுடன் கூறல். | மகிழ்ச்சி தூயாவியின் கனி எனக் கூற இடலறடைதல். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

# இறைவனிடம் பேசுவோம்

நடத்தை மேம்பாடுக்கேற்ற திருவிவிலியக் கதைகள் மூலம் கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும் குணநலன்களையும், சிறப்புப் பண்பான ஜெபத்தின் முக்கியத்துவத்தை அடையாளம் காண எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 1. நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற முக்கியமான சமய வழிபாட்டு ஒழுக்க விதிமுறை-களையும் சமய அடிப்படையில் தமது அறநெறி பற்றிய எண்ணக் கருக்களையும் இனங்காண்பார். | ஜெபம் | 1.1சமயம் தொடர்பான விசேட சந்தர்ப்பங்களில் கலந்து கொண்டு அனுபவம் பெறுவர். | 1.1.1 பங்குபற்றுதல் |
| | | 1.2 சமயநெறி தொடர்பான விசேட அனுட்டான வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.2 ஏற்ற சந்தர்ப்பத்தில் அவற்றைப் பயன்படுத்தல். |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலியம் 1 சாமுவேல் 1 (10 - 28)
- திருப்பாடல்கள் 50: 15ஆம் வசனத்தின் முதல் பகுதி
- அன்னா, எல்க்கானா குருவான ஏலி அவரகளின் உருவப் படங்களை கற்றல் வளமாக ஆசிரியர் தயார்படுத்திக் கொள்ளல்.
- மாணவர்களின் ஆக்கங்களை பூர்த்தி செய்ய தேவைப்படும் நிறக் கடதாசி, பசை, கத்தரி

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 1**

- ஆசிரியர் மாணவர்களுடன் ஜெபத்தின் மூலம் பாடத்திற்குள் பிரவேசித்தல்.
- நாம் திருவிவிலியத்தில் உள்ள கதை ஒன்றினைக் கேட்போம்.
- அந்த கதையில் கடவுளுடன் 4 பாத்திரங்கள் உள்ளன.
- அவர்கள் தான் அன்னாள், எல்கானா, குருவான ஏலி மற்றும் சாமுவேல்.

அன்னா, எல்கானா மற்றும் குருவான ஏலியின் ஏற்கனவே பெரிய அளவில் தயாரித்த உருவப் படங்களைப் பயன்படுத்தி கதையைக் கட்டியெழுப்புக.)

- அன்னாவின் கணவன் எல்கானா என்றும், சீலோவில் தேவாலயத்தில் இருக்கும் குருவானவர் ஏலி எனவும் அறிமுகப்படுத்துக.

**படிமுறை 2**

- (ஒரு நாள் அன்னா கவலையுடன் அழுதுகொண்டிருந்தாள். எல்கானா காண்கிறார். அன்னாவின் உருவப் படத்தைக் காண்பித்து தொனியை உயர்த்துக.) அந்த அந்த பாத்திரங்களுக்கேற்ப தொனியை மாற்றி கதையை கட்டியெழுப்புக.
- எல்கானா : அன்னா நீ ஏன் அழுகிறாய்? நீ ஏன் உண்ணவில்லை? நீ ஏன் மனவருத்தம் அடைகிறாய்? நான் உனக்கு மேலானவன் அன்றோ?
- அன்னா : (தேவாலயத்தில் அழுது புலம்பி எனக்கு ஒரு ஆண் குழந்தையைத் தாரும் என ஆண்டவரிடம் ஜெபம் செய்தேன்"
- அன்னா : "அவனை அவன் வாழ்நாள் முழுவதும் ஆண்டவராகிய உமக்கு ஒப்புக்கொடுப்பேன்"

  (இவ்விதமாய் அன்னா அமைதியாக விண்ணப்பம் செய்தார்.)
- (அன்னாவின் ஜெபத்தை குருவான ஏலி கேட்டுக்கொண்டிருந்தார். ஏலி ஆண்டவரின் பிரதிநிதி)
- குருவான ஏலி : "மனநிறைவோடு செல், இஸ்ரயேலின் கடவுள் நீ அவரிடம் விண்ணப்பித்த உனது வேண்டுகோளைக் கேட்டருள்வார்"
- அன்னா : " உம் அடியாள் உம் கண்முன்னே அருள்பெறுவாளாக"

(ஆண்டவரிடம் வேண்டிய அன்னா சென்று உணவருந்தினார். பின் அவர் முகம் வாடவில்லை.)

**படிமுறை 3**

- எல்கானா மற்றும் அன்னா ஆண்டவருக்கு நன்றி செலுத்தினர்.
- இறைவனிடம் பேசிய, இறைவனிடம் விண்ணப்பம் செய்த அன்னா மற்றும் எல்கானாவுக்கு ஒரு மகன் பிறந்தான். அக் குழந்தையின் பெயர் சாமுவேல்.
- சாமுவேல் தன் பெற்றோரிடம் வளர்ந்த பின் குருவான ஏலி இருந்த தேவாலயத்தில் பொருத்தனையை நிறைவேற்ற சென்றான்.
- அவர்கள் மகிழ்வுடன் சிறுவனாகிய சாமுவேலை குருவான ஏலியின் ஆலயத்திற்கு அர்ப்பணித்தனர்.

**படிமுறை 4**

- திருவிவிலியக் கதைக்கு ஏற்ப மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- அன்னா மற்றும் எல்கானா மகிழ்ச்சியடைந்தனரா? ஆம். அவர்கள் என்ன செய்தனர்?
- அன்னா அழுது இறைவனிடம் விண்ணப்பம் செய்தார். இறைவன் பதிலளித்தார்.


- இறைவன் அளித்த பதில் நினைவில் இருக்கிறதா - அன்னாவிற்கு ஒரு மகனைக் கொடுத்தார்.
- இறைவனிடம் பேசி, இறைவனிடம் வேண்டுதல் செய்த அன்னா மற்றும் எல்கானாவிற்கு கிடைத்த குழந்தை சாமுவேல்.
- அவர்கள் மகிழ்வுடன் குருவான ஏலியின் ஆலயத்திற்கு சாமுவேலை அர்ப்பணித்தனர்.
- நாமும் இறைவனுடன் பேசுதல் வேண்டும். எமது மகிழ்ச்சியைப் போலவே துன்பங்களையும் ஜெபத்துடன் இறைவனிடம் கூறுவோம். கடவுள் நம்மோடு இருக்கிறார்.

செயல்நூல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்:

- பாடத்திற்கேற்ப செயற்பாடுகளை அறிய வழிப்படுத்துக.
- திருவிவிலியத்தில் 1 சாமுவேல் 1:17 எனும் வசனத்தை ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்து வாசித்தல்.
- மனநிறைவோடு செல், இஸ்ரயேலின் கடவுள் நீ அவரிடம் விண்ணப்பித்த உனது வேண்டு-கோளைக் கேட்டருள்வார்.
- பாடமாக்க வேண்டிய வேதவசனம் திருப்பாடல்கள் 50:15 இன் முற்பகுதி.

  “ துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள் உங்களைக் காத்திடுவேன். ”

ஆசிரியர் கையாளக்கூடிய உத்திகள் இரண்டு



**கணிப்பீடு :**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 1.1 சமயம் தொடர்பான விசேட சந்தர்ப்பங்களில் கலந்துகொண்டு அனுபவம் பெறுவார். | 1.1.1 | தாம் செய்யும் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தில் ஆமேன் எனும் சொற் தொடரைக் கூறல். | தாம் செய்யும் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தில் ஆமேன் எனும் சொற் தொடரைக் ஆசிரியரின் வழிகாட் டலில் கூறல். | தாம் செய்யும் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தில் ஆமேன் எனும் சொற் தொடரைப் பயன்படு- த்த இடலற டைதல். | தாம் செய்யும் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தில் ஆமேன் எனும் சொற் தொடரைப் பயன்படுத்தா திருத்தல். |
| 1.2 சமயநெறி தொடர்பான விசேட அனுட்டான வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.2 | சிறிய ஜெபம் ஒன்றைச் செய்தல் | சிறிய ஜெபம் குறைபா டுகளுடன் செய்தல் | மற்றுமொரு மாணவரின் உதவியுடன் சிறிய ஜெபம் ஒன்றைச் செய்தல் | சிறிய ஜெபம் ஒன்றைச் செய்யாதி ருத்தல் |

## எண்ணக்கரு - சூழல் நேயம்

## நாம் வாழும் உலகை பாதுகாப்போம்.

| |
|---|
| வாழ்வும் சுற்றுச் சூழலும் இணைக்கப்பட்ட விதத்தை வார்த்தை மூலம் தெரிந்துகொள்வதுடன், நாம் வாழும் உலகிற்கு உணர்திறன் மிக்கவராக மாறுவதே இப்பாடத்தின் நோக்கமாகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 8 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைததிருப்பதற்காகச் செயலாற்றுவார். | சுற்றுச் சூழல் | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்ப-தில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றல். |
| | | 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்.<br>8.2.2 ஆக்கபூர்வமான திறன்<br>8.2.3 உபகரணப் பயன்பாடு<br>8.2.4 மதிப்பளித்தல் |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 2:15 நினைவிற் கொள்க.

  (ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.)

- நடக்கூடிய சிறிய பூச்செடி அல்லது தாவரம் ஒன்றை கொண்டு வரும்படி முன்கூட்டியே தெரிவுபடுத்துக.

- பூந்தொட்டியை உருவாக்க தேவையான பொருட்களை தயார்படுத்தல். கையுறைகள்/ கை துடைக்க கைக்குட்டை/ கத்தரிக்கோல்/ பசை. ஒரு செடியை நடுவதற்கு ஒரு தொட்டியையும் தேவையான பொருட்களையும் பின்வருமாறு தயார் செய்யவும். (இணைப்பு 1)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 1**

- ஒவ்வொருவரிடம் அவர்கள் விரும்பும் ஏதாவது ஒன்றை அல்லது ஒருவரை நினைவில் கொண்டுவரும்படி கூறுங்கள்.
- உங்களைப் போலவே எனக்கும் பிடித்த விடயத்தை நானும் நினைவில் கொண்டு வருகிறேன்.

**படிமுறை 2**

- மாணவர்கள் அவர்கள் நேசிக்கும் விடயங்களை கேட்டறிந்து கலந்துரையாடுக.

  உதாரணம்: நானும் நீங்கள் சொன்ன எல்லா விடயங்களையும் நேசிக்கிறேன். இந்தச் சூழலை நான் மிகவும் நேசிக்கின்றேன்.

  ஆனால் நாம் நேசிக்கும் விசேடமான ஒரு விடயம் உள்ளது. அது தான் நாம் வாழும் உலகம்.

- இவ்வுலகம் நமக்கு பெறுமதியானவற்றைப் பரிசாகத் தருகின்றன. அலங்காரக் கற்கள், மண் வகைகள், தங்கம், வைரங்கள், இரத்தினங்கள் போன்றவை பற்றி மாணவர்களுக்கு கற்பிக்கவும்.
- நாம் ஏன் நமது சூழலை பார்க்கச் செல்லக்கூடாது? (முடிந்தால் மாணவர்களுடன் வெளியில் செல்லுங்கள், இல்லையெனின் படங்களைக் காட்டுங்கள்).

  உதாரணம்: எமது பாடசாலைச் சூழல் அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் போது நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ஆசையாக உள்ளது தானே?

  பாருங்கள் எமது பாடசாலைக்கு உள்ளே வரும் வழி சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கிறது அல்லவா?

  நாம் உள்ளே செல்வோம். ஏப்படி இந்த இடம்? நேர்த்தியாக இல்லாதது போல இருக்கிறது அல்லவா?

  பூச்செடி/ காய்கறி பாத்திகள் இருந்தாலும் நீர் ஊற்றவில்லை. சிறுவராக இருந்தாலும் பூச்செடியிற்கு நீர் ஊற்றி பராமரிக்க முடியும். நாம் எமது பாடசாலையின் எல்லா இடங்களையும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைக்க வேண்டுமம என எடுத்துக்கூறுக.

- நாம் எமது சூழலை நேசிக்கின்றமையால் நாம் சூழலுக்கு பரிசு கொடுக்க வேண்டும் எனக் கூறுக. பரிசாக பூச்செடி. காய்கறி, பழங்கள் போன்ற தாவரங்களை நடலாம், நீர் ஊற்றுதல், சுத்தம் செய்தல், நேர்த்தியாக வைக்க முடியும் எனக் கூறுக.

**படிமுறை 3**

- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 2:15 யை நினைவுபடுத்துக.

  (ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.)


**படிமுறை 4**

- இன்று நாம் நிலத்திற்கு பரிசு கொடுப்போம். கழிவுகளாக எறியப்படும் கொள்கலன் ஒன்றில் பூச்செடி ஒன்றை அமைப்போம்.
- ஆசிரியர் தேவைக்கேற்றவாறு கொள்கலன் ஒன்றை தயார்படுத்திக் கொள்ளுங்கள.
- கொண்டுவரப்பட்ட விதைகளை மாணவர்களுக்கு முன்னால் வைத்து அதற்கு பசளையிட்டு தாவரத்தை நடுவதற்கு அவர்களின் உதவியைப் பெற்று செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**செயற்பாடு** 1


தேவையான பொருட்கள் (ஆசிரியரின் தயாரிப்புக்காக)


- மணல்/ மண்/ உரம்/ தேங்காய் மட்டை (ஈரமான கவலை), கம்பி மற்றும் வண்ணப் பொருட்கள், கொள்கலனை அலங்கரிக்க மணல் தூவி அலங்கரிக்கலாம்.











**கணிப்பீடு :**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 8.1தம்மைச் சூழவுள்ள சுற்றாட லைச் சுத்திகரிப் பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 | சுற்றுச் சூழலை சுத்தமாகவும் நேர்த்தி யாகவும் வைத்திருக்க பங்களித்தல். | சுற்றுச் சூழலை சுத்தமா-கவும் நேர்த்-தி யாகவும் வைத்திருக்க தயங்குதல். | சுற்றுச் சூழலை சுத்தமாகவும் நேர்த்தியா கவும் வைத்திருக்க உதவி செய்யாதிருத்-தல். | சுற்றுச் சூழலை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க உதவி செய்யா திருத்தல். |
| 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப் பதற்கு ஏற்ற நடவடிக் கைகளை மேற்கொ ள்வார். | 8.2.1 | தாவர மொன்றை நடுவதற்கு முன்வருதல். | தாவர மொன்றை நடுவதற்கு உதவிசெய்ய முன்வரா திருத்தல். | தாவரமொன்றை நடுவதற்கு உதவி செய்யாதி ருத்தல். | தாவரமொன்றை நடுவதற்கு உதவி செய்யா திருத்தல். |

# எண்ணக்கரு - கண்ணியம், ஒழுக்கம் மற்றும் இணக்கப்பாடு

## பகிர்தல்

நல்ல நடத்தை கொண்ட பிள்ளை பகிர்ந்து கொள்ளும் குணத்தை வளர்த்துக் கொள்ள உதவுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 7 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | நல்ல குணம் | 7.1 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்பு-களை இனங்காண்பார். | 7.1.1சிறப்பான நற்பண்புகளை அறிந்து அவற்றை இனங்காணல். |
| | | 7.2 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய பழக்கங்களை இனங்காண்பார். | 7.2.1 சிறப்பான முறையில் நற்பண்புகளை அறிந்து இனங்காணல |
| | | 7.3 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் தமது நடவடிக்கைகளை கொள்வார். | 7.3.1 சீரான நடத்தையை கடைபிடித்தல். |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலிம் யோவான் 6:1-13
- வைக்கோல்/ காய்ந்த அல்லது இளைய தென்னோலை
- படங்கள், நிறப் பென்சில்கள், A4 நிறக் கடதாசிகள், கத்தரிக்கோல், பசை
- களிமண்இ உடயல, மா, நீர், சிறிய பாத்திரம், பேப்பர் பிலேட், சிறிய உறை (பை), பிரிஸ்டல் அட்டை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 1**

- பகிர்தலுக்கு தொடர்புடைய சிறு கதை அல்லது விளையாட்டு ஒன்றின் மூலம் பாடத்திற்குள் பிரவேசியுங்கள்.

**படிமுறை 2**

- மாணவர்களின் பதில்கள் மூலம் திருவிவிலியத்தில் யோவான் 6:1-13 எனும் வசனத்தை அடிப்படையாகக் கொண்ட சிறு நாடகம் ஒன்றை நடித்து காண்பியுங்கள்.

இயேசு : இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?

பிலிப்பு : இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே

அந்திரேயா :இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன. (ஆச்சரியத்துடன்) ஆனால்! இத்தனை பேருக்கு இவை எப்படி போதும்?

இயேசு : மக்களை அமரச் செய்யுங்கள்.

அந்திரேயா : (இயேசுவிடம் சிறுவனை அழைத்து வரல்)

இயேசு : ஒன்றும் வீணாகாதபடி, எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள்.


**படிமுறை 3**

- நாடகத்தை நடாத்திய பின் மாணவர்களுடன் ஒரு சிறிய கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- அந்த குணாதிசயத்தைப் பற்றி மாணவர்களிடம் வினவுங்கள்.
- என்ன நடத்தது என மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களட பகிர்ந்து கொண்ட சந்தர்ப்பங்களைக் கேட்டறியுங்கள்.
- அவ்வேளையில் அவர்களிடம் உள்ள ஒன்றை பகிர்ந்துகொள்ள வாய்ப்பளியுங்கள்.

**படிமுறை**

- ஐயாயிரம் பேருக்கு உணவளித்த கதைக்கு தொடர்புடைய படங்களை காண்பிக்கவும்.





- பார்த்த படங்கள் மற்றும் நாடகத்திலிருந்து அவர்கள் விரும்பும் ஒரு சித்திரம் வரைய வழிகாட்டுங்கள்.

**படிமுறை 4**

ஒரு கூடையில் 5 அப்பங்களும் 2 மீன்கள் அமைத்தல்.

- வைக்கோல்/ காய்ந்த அல்லது இளந்தென்னோலை, நிறப் பென்சில்கள், A4 நிறக் கடதாசி, பேப்பர் பிலேட், சிறிய உறை (பை), பிரிஸ்டல் அட்டையைப் பயன்படுத்தி சிறிய கூடையை அமைக்க ஆலோசனை வழங்குங்கள்.
- களி/ க்லே/ மா ஏதாவது ஒன்றின் மூலம் அப்பம் மற்றும் மீன்கள் செய்ய வழிகாட்டுங்கள்.
- மாணவர்கள் தாம் செய்யும் பொருட்கள் மூலம் அனுபவங்களைப் பெற சந்தர்ப்பம் அளிக்குக.
- அவ்வாறு இல்லாவிடின் நிறப் பென்சில்கள், நிறக் கடதாசி, பிரிஸ்டல் அட்டையின் மூலம் அமைத்த கூடை, அப்பங்களும் மீன்களும் செய்ய வழிகாட்டுக.


















**படிமுறை 5**

- கீழே உள்ள பாடலை அபிநயத்துடன் பாடுங்கள்.

ஐந்து அப்பம் இரண்டு மீன்கள் - சிறுவனின் கையில்

சந்தோஷமாய் தான் கொடுத்தான் - இயேசுவின் கையில்

இயேசு ஆசிர்வதித்து அதனை பிட்டு கொடுத்தார்

ஐயாயிரம் பேர்களது பசியையும் தீர்த்தார்.

- இச் செயற்பாடுகள் அனைத்தும் வகுப்பறையில் வழங்கிய பின் மதிப்பீடு செய்க.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

- மாணவர்கள் கொண்டு வந்த பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
- ஒரு மாணவர் ஏதேனும் கொண்டு வரவில்லை எனின், மாணவர்கள் பகிர்ந்து கொள்ளவும், ஒன்றாகச் செயற்பாடுகளில் ஈடுபடவும் ஊக்குவியுங்கள்.
- பகிர்ந்து கொள்ளும் பழக்கத்தை வளர்க்க இதை ஒரு வாய்ப்பாக பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 7.1 ஒரு சிறந்த பிள்ளை யென்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண் புகளை இனங் காண்பார். | 7.1.1 | கிறிஸ்தவ பிள்ளை யாக பகிர்தல் மிக அவசியம் எனக் கூறல். | கிறிஸ்தவ பிள்ளை யாக பகிர்தல் மிக அவசியம் என ஓரளவுக்குக் கூறல். | கிறிஸ்தவ பிள்ளையாக பகிர்தல் கிறிஸ்தவ பண்பு எனக் கூறல். | கிறிஸ்தவ பிள்ளையாக பகிர்தல் கிறிஸ்தவ பண்பு எனக் கூறாதிருத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7.2 ஒரு சிறந்த பிள்ளை யென்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய பழக்கங் களை இனங் காண்பார். | 7.2.1 | தாவர மொன்றை நடுவதற்கு முன்வருதல். | தாவர மொன்றை நடுவதற்கு முன்வருதல். | தாவர மொன்றை நடுவதற்கு தாமதமாக முன்வருதல். | தாவர மொன்றை நடுவதற்கு முன்வராதி ருத்தல் |

## எண்ணக்கரு - பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை

## அர்ப்பணிப்புள்ள மனதுடன் இயேசுவிடம் நெருங்குவோம்.

| |
|---|
| கிறிஸ்தவ பிள்ளையாக அன்றாட செயற்பாடுகளில் ஈடுபடும்போது கவனத்துடனும் சிந்தனையுடனும் நடந்து கொள்ள நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுவதே இப்பாடத்தின் நோக்கமாகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 11 அன்றாட நடவடிக்கையின் போது அறிவுத்தெளிவுடன் சுயாதீனமாகச் செயற்படுவார். | நடக்கும்போது மன உறுதியுடன் நடத்தல். | 11.2 நடக்கும்போது அடிப்பாதத்தில் உணருகின்ற மென்மை-வன்மை, ஈரம் - வரட்சி சூடு - குளிர் என்பவற்றை உணர்ந்து நடப்பார். | 11.1.1 அறிவுத் தெளிவுடன் சுயாதீனமாக நடத்தல்.<br>11.2.1 மென்மை-வன்மை, ஈரம் - வரட்சி சூடு - குளிர் ஆகியவ-ற்றை உணர்ந்து அறிந்து கொள்ளல். |
| | | 11.3 எளிமையான முயைில் தியானத்தில் (Meditation) ஈடுபடுவார். | 11.3.1 உடல் அவயவங்களின் பயன்பாட்டை சீரான முறையில் மேற்கொள்ளல்.<br>11.3.2 அதனை ஏற்றவாறு பிரயோகித்தல். |

**கற்றல் வளங்கள் :**

- இப்பாடத்துடன் தொடர்புடைய பாடல் ஒலிநாடா
- உடற்பயிற்சி புத்தகம், வெள்ளை A4 தாள், நிறப் பென்சில்கள்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 1**

- மாணவர்கள் வெளியே அமரக்கூடிய ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்களை அமைதியாக இருக்கச் செய்து பாடலொன்றைக் கேட்க வழிப்படுத்துக.

**படிமுறை 2**

- மாணவர்கள் நடக்கக்கூடிய இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்கள் அடிபாதம், உள்ளங்கால் மற்றும் கால்விரல்கள் போன்ற பாதத்தின் பாகங்களைப் பெயரிட்டுக் காட்டச் சொல்லுங்கள்.
- அவர்களை முனனோக்கியும் பின்னோக்கியும் மடக்கி வசதியாக நிற்கச் செய்யுங்கள்.
- அவர்களை சாதாரண வேகத்தில் நடக்கச் சொல்லுங்கள்.
- அவர்களைச் சுற்றியுள்ள சத்தங்களைக் கேட்காமல், கழுத்தை சற்று குனிந்து அவர்கள் நடப்பது போல் மட்டும் கற்பனை செய்துகொண்டு 10 அடிகள் முன்னோக்கி நடக்கச் சொல்லுங்கள்.
- நடக்கும்போது அவர்களின் கால்கள் தரையில் மோதுவதைப் பற்றியும் அது வன்மையானதா? மேன்மையானதா? வரட்சி - சூடானதா அல்லது குளிராக இருக்கிறதா என்பதை பற்றியும் நினைத்துப் பார்க்கச் சொல்லுங்கள்.
- கால்களை வைக்கும் போது இவ்வாறு நினைக்க வழிகாட்டுக.

  பாதம், கால் விரல்கள், உள்ளங்கால் மற்றும் பாதங்களின் நடுப்பகுதிகள் எப்படி இருக்கும்?

  உடலின் நிறை வலது காலில் இருந்து இடது காலுக்கு மாறுவது

- தரையில் மிதிக்கப்படும் வேறு எதையும் நினைக்க வேண்டாம் எனக் கூறுங்கள்.
- 10 அடிகள் எடுத்து வைத்து திரும்பும் போது உங்கள் கால்களை ஒன்றாகக் கொண்டு வந்து சிறிது நேரம் காத்திருந்து மீண்டும் பின்னால் திரும்பவும்.
- இவ்வாறு 3, 4 முறை நடக்கச் செய்க.

**படிமுறை 3**

- மாணவர்கள் இலகுவாக அமரக்கூடிய இடத்திற்கு அழைத்துச் சென்று அமரும்படி கூறுங்கள்.
- பாடும் போது பாடலின் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்கவும் அவற்றைப் பற்றி சிந்திக்கவும் அறிவுரை கூறுங்கள்.
- கடவுள் நமக்குக் கொடுத்த மிக அருமையான பொருளாக அவர்களின் பெற்றோரை நினைவில் கொண்டுவரச் சொல்லுங்கள்.
- அவர்களின் கண்களை மூடிக்கொண்டு அவர்களின் பெற்றோரின் நினைவாகப் பாடப்படும் பாடலைக் கேட்கச் சொல்லுங்கள்.

1. என் அம்மா மிகவும் நல்லவர் - அவர் எனக்கு

   தாய்ப்பால் கொடுத்தார்

   என் முகத்தை கழுவினார்.

   இந்த சட்டை, உடையை அணிவித்தார்

2. என் அப்பா என்னிடம் மிகவும் அன்பாக இருந்தார்

   அவர் என்னை ஆறுதல்படுத்தினார்

   என்னை பாதுகாப்பாக உணரவைத்தார் - என்

   கண்ணீரைத் துடைத்தார் - என்னைத்

   தம் மடியில் படுக்க வைத்தார்.

3. பிதாவாகிய தேவன் மிகவும் நல்லவர்

   நம்மீது உள்ள அன்பினால்இ

   நம்மைப் பாதுகாக்க அன்பான

   பெற்றோரை நமக்குக் கொடுத்தார்.

- திருவிவிலியத்தில் 1 கொரிந்தியர் 2:16 எனும் வசனத்தை மாணவர்களுக்கு சத்தமாக வாசித்துக் காட்டுங்கள்.
- ஆண்டவருடைய மனதை அறிபவர் யார்? அவருக்கு அறிவுரை கூறுபவர் யார்? நாமோ கிறிஸ்துவின் மனதைக் கொண்டுள்ளோம்.
- இயேசு எல்லாவற்றிலும் நம்மை வழிநடத்துகிறார் என்பதையும் ஒவ்வொரு நாளும் அவரிடம் பேசுவதையும் அவரைக் கௌரவப்படுத்துவதை நாம் ஒரு பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதையும் அடிக்கடி நினைவுபடுத்துங்கள்.

**செயல்நூல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்:**

- மாணவர்கள் பயிற்சி புத்தகத்தில் தமது விரலை ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்கு நகர்த்திச் செல்லும் போது மூச்சை உள்வாங்கி வெளியிடும்படி வழிகாட்டுக.
- நான் இயேசுவை நேசிக்கிறேன்." என்று மட்டுமே நினைத்தல்.
- இம்முறையில் புத்தகத்தைச் சுற்றி தமது விரலை நகர்த்தச் சொல்லுங்கள்இ அதைப் பற்றி மட்டுமே சிந்தித்து அடுத்த மூலையிலிருந்து அடுத்த மூலைக்கும்இ அங்கிருந்து அடுத்த மூலைக்கும் செல்லுங்கள்.
- இவ்வாறு 5 முறை செய்யுங்கள்.

**கீழே காட்டப்பட்டுள்ளபடி காற்றாலை ஒன்றறை எவ்வாறு அமைப்பது என வழிக்காட்டுக.**

- ஒரு சதுர வெள்ளைத் தாள் (16 cm x 16cm)
- ஒரு பக்க மூலையை இணைக்குமாறு கோடு வரைக.
- மாணவர்கள் தாம் விரும்பும்படி நான்கு பகுதிகளை 4 நிறங்களில் நிறந் தீட்ட வழிகாட்டுக.
- சதுரத்தின் நடுவே சிறு இடைவெளி வைத்து கோட்டின் மீது வெட்டுக.
- ஒரு முனையை விட்டு மற்றைய முனையையை நடுவிற்கு இணைக்குக.
- நான்கையும் ஒன்றாக இணைத்து ஒரு ஊசியும் பொத்தானையும் வைத்து இணைத்து அதை ஒரு பென்சில் அல்லது குழாயை பொருத்துக
- காற்றாலையை ஊதி “இயேசுவே நான் செய்த தவறுகளுக்காக என்னை மன்னியுங்கள்” என நினைத்துப் பார்க்கும்படி கூறுங்கள்.
- இவ்வாறு 5 முறை செய்ய வழிகாட்டுக.

**கணிப்பீடு :**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 11.1 நடக்கும்போது அறிவுத் தெளிவுடன் சுயாதீனமாக நடப்பார். | 11.1.1 | வழங்கப்பட்ட அனைத்து வழிமுறை களையும் பின்பற்றி உறுதியுடன் நடப்பார். | வழங்கப்பட்ட ஒருசில வழிமுறை களையும் பின்பற்றி உறுதியுடன் நடப்பார். | வழங்கப்பட்ட ஒருசில வழிமுறை களை பின்பற்றி நடப்பதற்கு இடர்படல். | வழங்கப்பட்ட ஒருசில வழிமுறை களை பின்பற்றி நடப்பதற்கு எதிர்பு தெரிவித்தல். |
| 11.2 நடக்கும்போது அடிப்பாதத்தில் உணருகின்ற மென்மை-வன்மை, ஈரம் - வரட்சி சூடு - குளிர் என்பவற்றை உணர்ந்து நடப்பார். | 11.2.1 | நடைபயிற்சி மூலம் கிடைத்த இரண்டு அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல். | நடைபயிற்சி மூலம் கிடைத்த அனுபவ ங்களை பகிர்ந்து கொள்ளல். | நடைபயிற்சி மூலம் கிடைத்த அனுபவ ங்களை பகிர்ந்து கொள்ள இடர்படல். | நடைபயி-ற்சி மூலம் கிடைத்த அனுபவங் களை பகிர்ந்து கொள்ளா திருத்தல். |

## உள்ளடக்கம்

## மூன்றாம் தவணை

எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

பாடம் 1 - நேர்மையாளன் நோவா

பாடம் 2 - காணாமற் போன மகனின் உவமை

எண்ணக்கரு - சமூக கலாசார நல்லிணக்கம்

பாடம் 3 - நத்தாரைக் கொண்டாடுவோம்.

எண்ணக்கரு - சூழல் நேயம்

பாடம் 4 - கடவுள் படைத்த வானத்துப் பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள்

எண்ணகஎண்ணக்கரு - சமூக, கலாச்சார நல்லிணக்கம்

பாடம் 5 - “மன்னிப்பு வழங்கிய ஸ்தேவான்”

எண்ணகஎண்ணக்கரு - பலம் ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை

பாடம் 6 - கடவுளின் அனுபவத்தில் செயற்படுவோம்.

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

## பாடம் 1 - நேர்மையாளன் நோவா

நோவாவின் நேர்மையான குணத்தை தமது வாழ்வில் பயன்படுத்திக் கொள்வதற்கு இப்பாடம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2 சமய தோற்று விப்பாளர்கள்/ படைப்பாளர் குறித்த கதைகளையும் போதனை களையும் கவிதை வடிவில் நடத்தை விருத்திக்கு பொருத்தமான சிறப்பான பண்புகளைக் கூறுவர். | பழைய ஏற்பாட்டின் நபர் | 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுதல். |
| | | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுத்தல். |

**கற்றல் வளங்கள் :**

- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 6: 8-10 மற்றும் 7: 6 ஆகிய வசனங்கள்.
- பாடத்திற்கு தொடர்பான படங்களை தேவைக்கேற்ப தயார்படுத்திக் கொள்க.
- நிறமூட்டுவதற்கு தேவையான பொருட்கள்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01**

(நோவாவின் படத்தை காண்பித்து திருவிவிலியத்தில் தொடக்கநூல் 6: 8-10 வரையான நோவாவை குறித்த கதையை எளிமையாக விளக்குங்கள்)

- நோவா வாழ்ந்த நாட்டில் மக்கள் தவறான செயல்களில் ஈடுபட்டார்கள் ஆனால் நோவா நேர்மையான ஒரு மனிதன்.
- எந்த குற்றமும் செய்யாத மனிதன் நோவா.
- நோவா கடவுளோடு நடந்தார்.
- நோவா நேர்மையாளனாக இருந்தமையால் ஆண்டவரின் அருள் அவனுக்கு கிடைத்தது.

**படிமுறை 02**

நோவாவின் கதைப் படங்களைப் பயன்படுத்தி கதையை எளிமையாக முன்வையுங்கள். பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்க.

- நோவா ஒரு நல்ல (நேர்மையான) மனிதன்.
- அவருக்கு மனைவியும், சேம், காம், யாப்பேத்து என்னும் மூன்று புதல்வர்கள் இருந்தனர்.
- கடவுள் நோவாவிற்கு ஒரு பேழை செய்யும்படி கட்டளையிட்டார்.
- அவன் அந்தக் கட்டளைக்கு கீழ்படிந்து கடவுள் கூறியபடி பெரிய பேழை ஒன்றை செய்து அனைத்து மிருகங்களிலும் இரண்டிரண்டாக பேழைக்குள் சேர்த்துக்கொண்டான்.

- அவனின் கீழ்படிவு காரணமாக அவனின் குடும்பத்தில் அனைவரையும் பாதுகாக்க கடவுள் விரும்பினார்.
- அதன் பின் பெருமழை பெய்தமையால், பெருவெள்ளம் ஏற்பட்டது.
- வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது நோவாவிற்கு வயது 600 என திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- (வாசிக்கவும் தொடக்கநூல் 7:6)

**படிமுறை 03**

- கடவுள் நோவாவின் நேர்மையையும் கீழ்ப்படிவையும் கண்டதால் நோவாவுடன் இருந்த மக்களையும் உயிரினங்களையும் கடவுள் இந்த அழிவில் இருந்து பாதுகாத்தார்.
- மீண்டும் இவ்வாறு பெருவெள்ளம் ஏற்படாது என கடவுள் அடையாளமாக ஒரு வில்லை (வானவில்) வானத்தில் வைத்தார்.

**படிமுறை 04**

நோவாவின் கதையின் மூலம் நாங்கள் பெற்றுக்கொண்ட முன்மாதிரிகளை அவதானிப்போம்.

- நீங்களும் கடவுளுடன் விசுவாசத்துடன் தொடர்பை ஏற்படுத்தி நல்ல பிள்ளைகளாகுங்கள்.
- நோவாவைப் போல கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படியுங்கள்.
- கிறிஸ்தவ பிள்ளையாக தமது வீட்டில்இ பாடசாலையில், அயலவர்களுடன் அன்புடன் இரு தமது நண்பருக்கு மதிப்பளியுங்கள்.
- திருவிவிலியத்தில் குறிப்பிட்டுள்ளபடி எந்த குற்றமும் செய்யாத ஒரு நல்ல பிள்ளையாகுவதற்கு முயற்சி செய்யுங்கள்.
- அப்படி செய்தால் கடவுளின் கருணை உங்களுக்கு உரித்தாகும்
- உங்கள் நேர்மை கடவுளின் அருளைப் பெற்றுத் தரும்.

**படிமுறை 5**

- நோவாவின் நற்குணங்களை சொல்வதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- நோவாவின் கதையின் மூலம் 5 வினாக்களை வினவுங்கள்.

**மாணவ செயற்பாட்டுக்கான வழிகாட்டல்:**

- நோவாவின் கதை தொடர்பான படங்களை காண்பித்து பிள்ளைகள் கதையை கட்டியெழுப்ப உதவுங்கள்.
- அக் கதையின் படங்களை பயன்படுத்தி உமது வீட்டில் ஒருவருக்கு அல்லது நண்பருக்கு நோவாவின் கீழ்ப்படிவு பற்றி கதை கூற வழிகாட்டுங்fs;.

**கணிப்பீடு**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப் பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதி ரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மா- திரிகளைக் கூறுதல். | நோவாவின் விசேட குணங்கள் 3 கூறுவார். | நோவாவின் விசேட குணங்கள் 2 கூறுவார். | நோவாவின் விசேட குணம் 1 கூறுவார். | நோவாவின் விசேட குணங்களைக் கூற இடர்படுவார். |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவி மடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதை களைச் செவிம டுத்தல். | 4 அல்லது 5 வாய்வழி வினாக் களுக்கு சரியாக விடைய ளிப்பார். | 2 அல்லது 3 வாய்வழி வினாக் களுக்கு சரியாக விடைய ளிப்பார். | 2 அல்லது 3 வாய்வழி வினாக் களுக்கு ஒரு மாணவரின் உதவியுடன் விடைய ளிப்பார். | எந்த வினாக்க னுக்கும் விடையளிக்க இடர்படுவார். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

## பாடம் 2 - காணாமற் போன மகனின் உவமை

| |
|---|
| இயேசு கூறிய காணாமற் போன மகனின் உவமைக் கதையை செவிமடுத்து அதன் அர்த்தம் மற்றும் முன்மாதிரியை புரிந்துகொண்டு அவற்றை நம் வாழ்விற்கு முன்மாதிரியாக ஏற்றுக்கொள்வது இப்பாடத்தின் நோக்கமாகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 2 சமய தோற்று விப்பாளர்கள்/ படைப்பாளர் குறித்த கதைகளையும் போதனை களையும் கவிதை வடிவில் நடத்தை விருத்திக்கு பொருத்தமான சிறப்பான பண்புகளைக் கூறுவர். | உவமை மற்றும் முன்மாதிரிக் கதை | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுத்தல். |
| | | 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதி ரிகளைக் கூறுதல். |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியத்தில் லூக்கா 15: 11-32
- பெனல் அட்டை
- காணாமற் போன மகனின் உவமைக்கு தொடர்பான உருவம்.
- நிறப் பென்சில்கள்
- கத்தரிக்கோல்
- பசை

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01**

- காணாமற் போன மகனின் உவமைக் கதையை பெனல் அட்டையின் ஆதாரத்துடன் உருவங்களை ஒட்டி கதையைக் கூறுங்கள்.
- இக்கதை நீளமாக இருப்பதால் ஆசிரியர் அதனை ஈர்க்கக்கூடிய மற்றும் கவர்ச்சிகரமான விதத்தில் முன்வையுங்கள்.

ஒரு தந்தைக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர்.

அவர்கள் இருவரில் இளையவர் தந்தையின் சொத்தில் தனது பங்கைக் கேட்டார்.

சில நாட்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு தூர நாட்டிற்கு சென்றார்.

அந் நாட்டில் வெவ்வேறு செயலில் ஈடுபட்டு தமது சொத்தை அழித்துவிட்டார்.

எல்லாம் செலவழித்த பின் அந் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது.

பின் இந்த இளைய மகன் தனது தேவையை உணர ஆரம்பித்தான்.

அந் நாட்டில் குடிமக்களுள் ஒருவரிடம் வேலை செய்யும் ஒருவனாக மாறினான்.

பன்றிகள் மெய்க்க வயலுக்குச் செல்ல நேர்ந்தது.

இந்த இளைய மகனுக்கு பன்றிகளுக்கு கொடுக்கும் உணவை உண்ண நேர்ந்தது.

ஒருவரும் அவனுக்கு எதுவும் கொடுக்கவில்லை.

அப்போது அவன் அறிவு தெளிந்தவனானான்.

அவனுக்கு அவனது தந்தையை நினைவிற்கு வந்தது.

அவனது தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்கும் என நினைவில் வந்தது.

அவனுக்கு உணவு கிடைக்காமல் பசியால் சாக நேரிடும் என நினைத்தான்.

அவன் எழுந்து தந்தையிடம் சென்று இவ்வாறு கூறுவதற்கு நினைத்துக் கொண்டான்.

**“அப்பா” கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்: இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்: உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும்.”**

எனக் கூறுவதாக நினைத்துக் கொண்டு, தனது தந்தையைத் தேடிச் சென்றார்.

தொலைவில் வந்துகொண்டிருந்த போதே தந்தை அவனைக் கண்டு

பரிவுடன் ஓடிப்போய் அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.

மகன் தான் நினைத்தபடியே தந்தைக்கு கூறினார்.

‘‘நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்’’

ஆனால் தந்தை தன் பணியாளரை அழைத்து

உடனே நல்ல ஆடையைக் கொண்டுவந்து அணிவிக்கும்படி கூறினார்.

அவனது கைக்கு மோதிரமும் காலுக்கு மிதியடியும் அணிவிக்குமாறு கூறினார்.

கொழுத்த கன்றை அடித்து விருந்திற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினார்.

இவன் என் மகன் காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துவிட்டான், உண்டு குடித்து கொண்டாடுவோம் என தந்தைக் கூறினார்.

படிமுறை 02

- இக் கதை திருவிவிலியத்தில் உள்ளது எனவும் இயேசு வாழ்ந்த காலத்தில் அவரால் கூறப்பட்ட கதை என்றும் மாணவர்களுக்கு கூறுங்கள்.
- இக்கதையில் தந்தையை - கடவுளுக்கு தொடர்புபடுத்தி நாம் தவறான வழியில் செல்லும் போது நம் தவறை நாம் உணர்ந்து அறிவு தெளியும் போது கடவுளிடம் சென்று எமது தவறுகளுக்காக மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கூறுங்கள்.
- நாம் மீண்டும் சரியான வழியில் வரும்போது கடவுள் மகிழ்ச்சி அடைகிறார் என்றும் எம்மை மிக அன்புடன் ஏற்றுக் கொள்கிறார் என்றும் அப்போது எமது பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கிறது என்றும் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையாகக் கூறுங்கள்.

**படிமுறை 03**

இக் கதையின் மூலம் எமது வாழ்விற்கு கிடைக்கும் முன்மாதிரிகளை மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- பெற்றோருக்கு கீழ்ப்படிதல்
- அவர்களின் மனம் நோகாமல் நடத்தல், வாழ்தல்.
- நாம் செய்த தவறுகளை மீண்டும் செய்யாமல் இருத்தல் மற்றும் தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டு சரியான வழியில் செல்லுதல்.
- பெற்றோரை நேசித்தல்.

**படிமுறை 04**

மாணவர் கைநூலில் படங்களுக்கேற்ப படங்களைப் பார்த்து கதையைக் கூறுவதற்கு ஒவ்வொரு மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**படிமுறை 05**

வாய்வழி வினாக்கள் வினவுவதன் மூலம் மாணவர்களின் அறிவை மதிப்பிடுக.

- கதையில் கூறப்பட்ட தந்தைக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்?
- தந்தையிடம் தனது பங்கை கேட்டது மூத்த மகனா? இளைய மகனா?
- மகன் தனது பங்கை எடுத்துக் கொண்டு என்ன செய்தான்?
- தான் இருந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட போது அவன் செய்த வேலை என்ன?
- மகனுக்கு எங்கு இருக்கும் போது அறிவு தெளிந்தது?
- அவன் என்ன செய்தான்?
- தந்தை மகனை எவ்வாறு வரவேற்றார்?
- இப்பாடம் மூலம் கற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?

**கணிப்பீடு**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயம் சார்ந்த கதை களை விருப்புடன் செவிம டுப்பார். | 2.1.1 | எல்லா வினாக் களுக்கும் சரியாக பதிலளிப்பர். | ஐந்து வினாக் களுக்கு சரியாக பதிலளிப்பர். | மூன்று வினாக் களுக்கு சரியாக பதிலளிப்பர். | எந்த வினாக் களுக்கும் விடை யளிக்க இடர்படுதல். |
| 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மா-திரிக ளைக் கூறுவர். | 2.3.1 | உவமைக் கதை மூலம் தமக்குக் கிடைக்கும் முன்மா-திரிகளை வெளிப்படுத்-துவர். | உவமைக் கதை மூலம் தமக்குக் கிடைக்கும் முன்மாதிரி-களை ஓரளவு க்கேனும் வெளிப்படுத்-துவர் | உவமைக் கதை மூலம் தமக்குக் கிடைக்கும் முன்மா-திரிகளை மற்றுமொரு மாணவரின் உதவியுடன் விடையளிப்-பார். | உவமைக் கதை மூலம் தமக்குக் கிடைக்கும் முன்மா-திரிகளை வெளிப் படுத்த இடர்படுதல். |

## எண்ணக்கரு - சமூக கலாசார நல்லிணக்கம்.

## பாடம் 3 - நத்தாரைக் கொண்டாடுவோம்.

| |
|---|
| நத்தார் கிறிஸ்தவ சமய நிகழ்வு என்பதை அறிந்துகொண்டு அதனை அர்த்தமுள்ளதாகக் கொண்டாட வழிகாட்டுவதே இப்பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயல்திற தர நிலைகள் | கணிப்பீட்டு நிதி |
|---|---|---|---|
| 4. சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி அவை தொடர்பான அனுபவங்களைப் பெறுவர். | எமது சமய நிகழ்வுகள் | 4.1 விசேட சமய நிகழ்வுகளில் வினைத்திறனுடன் பங்குகொள்வார். | 4.1.1 வினைத்திற னுடன் பங்குபற்றுதல் |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார நிகழ்வு ஒன்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுவார். | 4.3.1செயற்பாடுகளில் ஈடுபடுதல். |

**கற்றல் வளங்கள்**

- மாட்டுத்தொழுவம்
- இரண்டு கைபொம்மைகள் (ஆசிரியர் மற்றும் ஒரு பிள்ளையின்)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01**

நத்தார் கிறிஸ்தவர்களின் சமய நிகழ்வாகும் என்பதை அறிமுகம் செய்க.

- நத்தார் என்று கொண்டாடுவது இயேசு பூமிக்கு வந்த நாள் என்பதைக் கூறி பின்வரும் விடயங்களை மாணவர்களுக்கு நினைவில் கொண்டுவாருங்கள்.
- மாட்டுத்தொழுவத்தை ஆசிரியரின் மேசையின் மீது வைத்து அது தொடர்பான கதை மற்றும் கதாபாத்திரங்களை சுருக்கமாக முன்வைக்கவும்.
- இயேசுவின் தாய் மற்றும் தந்தை - மரியாள் மற்றும் யோசேப்பு எனவும் அவர் பிறந்தது - மாட்டுத்தொழுவம் எனவும் அவரது படுக்கை ஒரு தீவனத் தொட்டி எனவும் அவர் பிறந்த இடத்திற்கு மேலே வானத்தில் ஒரு வால் நட்சத்திரம் பிரகாசித்தது என அந்த நாளில் வானதூதர்கள் வந்து துதி பாடல்களைப் பாடினர் எனவும்
- அவரை வணங்க மேய்ப்பர்களும் ஞானிகளும் வந்தனர்.
- ஞானிகள் - பரிசு கொண்டு வந்தனர் எனவும் - வெள்ளி, பொன், தூபவர்க்கம் (வாசனைத் திரவியம்) ஆகியன என நினைவுபடுத்துக.
- மாட்டுத்தொழுவில் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் அறிமுகம் செய்வது சிறந்தது.

படிமுறை 2

இதனைத் தொடர்ந்து ஆசிரியர் கைப்பொம்மைகளை கையில் வைத்தபடி உரையாடல் மூலம் பாடத்தை மேற்கொள்வார்.

(ஆசிரியர், ஆசிரியரின் கதாபாத்திரத்தையும் அருணின் கதாபாத்திரத்தையும் இரு கைப் பொம்மைகளைப் பயன்படுத்தி தொனிகளை மாற்றி உரையாடலை மேற்கொள்ளல்)

| | | |
|---|---|---|
| அருண் | : | ஆசிரியரே இன்று நாம் நத்தாரை நிகழ்த்தும் போது அனேக விடயங்களை செய்வோம் அல்லவா? |
| ஆசிரியர் | : | ஆம் அருண், நத்தார் தினத்தன்று விசேட ஆராதனை நடைபெறும். நத்தார் தினத்தில் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவது எல்லா கிறிஸ்தவரின் கடமை. |
| அருண் | : | அவ் வழிபாட்டின் பின் அனைவரும் வாழ்த்து கூறுவதை பார்த்திருக்கிறேன் ஆசிரியரே! |
| ஆசிரியர் | : | ஆம் நத்தார் என்பது கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை. எந்தவொரு பண்டிகைக்கும் வாழ்த்து தெரிவிக்கும்போது கைகுலுக்கி, முத்தமிட்டு, கைகளை ஒன்றாக வைத்து வாழ்த்துதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி நாம் ஒருவரையொருவர் வாழ்த்தலாம். நத்தாருக்கு நேரில் சந்திக்க முடியாதவர்களை Christmas card மூலம் வாழ்த்தலாம். |
| அருண் | : | நத்தாரிற்கு அம்மா எனக்கு புதிய ஆடை வாங்கித் தந்தது நினைவிலிருக்கிறது. |
| ஆசிரியர் | : | ஆம், நத்தார் தினத்தன்று ஆலயத்திற்கு புதிய ஆடைகளை அணிவார்கள். ஆனால் அது அவசியமில்லை. புதிய ஆடை வாங்க முடியாதவர்களையும் நாம் சிந்திக்க வேண்டும். |
| அருண் | : | நத்தாரிற்கு அம்மா கேக் செய்வார்கள். நீங்களும் செய்வீர்களா? |
| ஆசிரியர் | : | நத்தார் தினத்தில் உறவினர்கள், அயலவர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் செல்வது ஒரு பொதுவான நடைமுறை. வருபவர்களை மகிழ்விக்க உணவு மற்றும் இனிப்புக்கள் தயாரிக்கப்படுகின்றன. உங்களுக்குத் தெரியுமா? முதல் நத்தார் நாளில் தூதர்கள் இயேசு கிறிஸ்து உலகில் பிறந்ததைப் பாடி புகழ்ந்தனர். அதன் நினைவாக இன்றும் ஆலயங்களில், பாடசாலைகளில் மற்றும் வேலைத்தளங்களில் நத்தார் கரோல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. |
| அருண் | : | எங்களுக்கு நத்தார் மரங்கள் செய்வது மிகவும் பிடிக்கும் ஆசிரியரே! |
| ஆசிரியர் | : | ஆம், நத்தார் காலங்களில் வீடுகளிலும் பல இடங்களிலும் நத்தார் மரங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. நத்தார் பண்டிகைகளுக்காக நம் வீடுகளை அலங்கரிப்போம். ஒரு திருமணம், பிறந்தநாள் விழாவை ஏற்பாடு செய்வது போல அலங்கரிப்போம். |
| அருண் | : | எனக்கு நத்தார் தாத்தா என்றால் மிகவும் பிடிக்கும். ஏன் என்றால் அவர் பரிசுகள் தருவார். |
| ஆசிரியர் | : | ஆசிரியர்- ஆம், எனக்குத் தெரியும். நத்தாரில் சிறு குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தது நத்தார் தாத்தாவிடம் இருந்து பரிசுகளைப் பெறுவது தான். ஆனால் பிள்ளைகளே, இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நத்தார் என்பது இயேசுவின் பிறந்தநாள். எனவே பிறந்தநாள் உரிமையாளரை மகிழ்விக்கும் வகையில் நத்தாரைக் கொண்டாட வேண்டும் அல்லவா? இயேசு இவ்வுலகிற்கு வந்த நாளை நாம் எவ்வாறு கொண்டாடுகிறோம்? அவர் இவ்வுலகில் இருக்கும் போது என்ன கூறினார்? |

படிமுறை 3

- நத்தாரின் உண்மையான அர்த்தம் வெளிப்படும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
- நத்தார் பாடலொன்றை செவிமடுக்க சந்தர்ப்பம் அளிக்குக.

உ+ம் :- பெத்தலையில் பிறந்தவரை

போற்றித்துதி மனமே-இன்னும்

சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர்-இங்கு

தாழ்மையுள்ள தாய் மடியில் தலைசாய்க்கலானார்

**படிமுறை 4**

கிறிஸ்தவ பிள்ளையாக வகுப்பறையில் ஏனைய சமயப் பிள்ளைகளுடன் அவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்தில் நத்தார் நிகழ்வொன்றினை ஒழுங்கு செய்க. நத்தார் பாடல் பாடுதல், தாம் செய்த நத்தார் அலங்காரங்கள் மூலம் வகுப்பறையை அலங்கரித்தல். முடிந்தால் சிறிய உபசரிப்பை மேற்கொள்க.

**படிமுறை 5**

- தமது மட்டத்தில் நத்தார் பண்டிகையை அர்த்தமுள்ளதாகக் கொண்டாட செய்யக் கூடிய விடயங்களை மாணர்களுடன் கலந்துரையாடுக.
- எடுத்துக்காட்டு : பாடசாலைக்கு அருகில் உள்ள சிறுவர் இல்லம் அல்லது முதியோர் இல்லம் ஒன்றைத் தெரிவு செய்து நத்தாரிற்காக அவர்களுக்கு வழங்கக்கூடிய சிறிய பரிசுகள் (சவர்க்காரம், துண்டு, கைக்குட்டை) பரிசு ஒன்றினைப் போல் தயார் செய்து எடுத்து வரும்படி கூறவும். மாணவர்களுடன் பாடசாலை நேரத்தில் சுற்றுலா ஒன்றை மேற்கொள்க அல்லது தமது பெற்றோருடன் நத்தாரிற்காக சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களை மகிழ்விக்க ஏதேனும் விடயமொன்றைச் செய்யும்படி கூறுக.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 4.1 விசேட சமய நிகழ்வு களில் வினைத்தி றனுடன் பங்கு கொள்வார். | 4.1.1 | நத்தார் நிகழ் விற்காக கடைபிடிக் கப்படும் கலாச்சார பழக்கவழக் கங்களை கூறுவர். | நத்தார் நிகழ் விற்காக கடைபிடிக் கப்படும் கலாச்சார பழக்கவழ க்கங்களை ஓரளவுக் கேனும் கூறுவர். | நத்தார் நிகழ் விற்காக கடைபிடிக் கப்படும் கலாச்சார பழக்கவழக் கங்களை மற்றுமொறு மாணவரின் உதவியுடன் கூறுவர். | நத்தார் நிகழ் விற்காக கடைபிடிக் கப்படும் கலாச்சார பழக்கவழக் கங்களைக் கூற இடர்படுதல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4.3 விசேட சமய அல்லது கலாசார நிகழ்வு ஒன்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுவார். | 4.3.1 | தாம் நத்தாரை அர்த்த முள்ளதாகக் கொண்டாட செய்ய வேண்டியவை பற்றி வெளிப்ப டுத்துவார். | தாம் நத்தாரை அர்த்த முள்ளதாகக் கொண்டாட செய்ய வேண்டி யவை பற்றி ஓரளவுக் கேனும் வெளிப்ப டுத்துவார். | தாம் நத்தாரை அர்த்த முள்ளதாகக் கொண்டாட செய்ய வேண்டியவை பற்றி மற்றுமொறு மாணவரின் உதவியுடன் வெளிப் படுத்துவார். | தாம் நத்தாரை அர்த்த முள்ளதாகக் கொண்டாட செய்ய வேண்டியவை பற்றி வெளிப்படுத்த இடர்படுதல். |

## எண்ணக்கரு - சூழல் நேயம்

# பாடம் 4 - கடவுள் படைத்த வானத்துப் பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள்

| |
|---|
| கடவுள் படைத்த வானத்துப் பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் பயன்களை கண்டறிந்து அவற்றை அன்பு செலுத்தி பராமரிக்க வழிகாட்டுவதே இப்பாடத்தின் நோக்கமாகும். |

| கற்றல் பேறு | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 9. சமய அறிஞர்கள் மற்றும் ஞானிகள் இயற்கையின் பெறுமானத்தை மேலோங்கச் செய்த விதம் பற்றி அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயலாற்றுவார். | கடவுள் படைப்பு | 9.3 உயிரினங்களை அன்பு செய்வார். | 9.3.1 அன்பு செய்தல் |
| | | 9.4 உயிரினங்களு-க்கு ஆகாரம் வழங்குவார். | 9.4.1 ஆகாரம், பானம் ஆகிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல். |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 1ஆம் அதிகாரம் 20-23 வரை.
- வெவ்வேறு பறவைகளின் படங்கள் கொண்ட காணொலி.
- வெவ்வேறு நீர்வாழ் உயிரினங்களின் படங்கள் கொண்ட காணொலி.
- சிறுவர் வேதாகமம் (படங்கள் கொண்ட)
- A4 தாள், நிறக் கடதாசிகள்
- பசை, கத்தரிக்கோல்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 01**

செயற்பாடு 1

பிள்ளைகளை பாடசாலைச் சூழலில் பறவைகள் சஞ்சரிக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லவும். அமைதியாகச் சுற்றுச் சூழலின் ஒலிகளுக்கு செவிமடுக்க வழிப்படுத்துக. பறவைகளின் ஒலிகளுக்கு செவிமடுத்து அவற்றை அறிந்து கொள்ளவும் கூறவும் சந்தர்ப்பம் அளியுங்கள்.

- வெளியே அமர இடமளிக்குக.
- பறவைகள் மூலம் எமக்கு கிடைக்கும் பயன்கள் பற்றிய கருத்துக்களை கேட்டல்.
- எம்மால் பறவைகளுக்கு கிடைக்கும் நன்மை, தீமைகளை கேட்டல்.
- சூழலை அழகுபடுத்தல், மன அமைதி போன்றவற்றால் பறவைகள் எமக்கு உதவி செய்கின்றன எனக் கூறல், அவற்றை அனுபவிக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- வெவ்வேறு பறவைகளின் உருவப் படங்களைக் காண்பித்து அவற்றைப் பற்றி பேசுதல்.

படிமுறை 02

- பாடசாலையில் மீன்தொட்டி அல்லது மீன்கள் கொண்ட சிறிய குளம் இருப்பின் அதனை பார்வையிட அழைத்துச் செல்லவும். அமர்ந்து அதனை நன்கு அவதானிக்க சந்தர்ப்பம் அளிக்கவும்.
- மீன்கள் அங்குமிங்குமாக நீந்தும் விதம், கதைக்கும் விதம் என்பவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.
- மீன்களைத் தவிர நீரில் வாழும் வேறு உயிரினங்கள் பற்றிக் கேட்டல். படங்களை காட்டுதல். இறால்இ கணவாய்இ நண்டு, ஆக்டோபஸ், கடல் சிங்கம், கடல் குதிரை மற்றும் ஆமை மற்றும் பெரிய சிறிய, கண்ணுக்குத் தெரியாத நீர்வாழ் உயிரினங்கள் உள்ளன எனவும் அவற்றின் உருவப் படங்களை பிள்ளைகளுக்கு காண்பிக்கவும்.

படிமுறை 03

- மாணவர்களுடன் இணைந்து பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களின் காணொலி ஒன்றை பார்வையிட சந்தர்ப்பம் அளியுங்கள்.
- கடவுள் படைத்த இவ்வழகிய உலகில் பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சூழலை அழகுபடுத்தும் விதம் மற்றும் அவை சூழலுக்கு வழங்கும் சேவைகள் (சூழல் சமநிலையைப் பேணல்இ வேறுபாடுகளை ஒழித்தல்) மனிதர்களாகிய எமக்கு அவை வழங்கும் மன அமைதி பற்றியும் கலந்துரையாடுக.
- திருவிவிலியத்தில் தொடக்கநூல் 1ஆம் அதிகாரம் 20-23 வரை வாசிக்கவும். சிறுவர் வேதாகமத்தில் படங்கள் கொண்ட சந்தர்ப்பங்களைப் பார்க்க இடமளிக்கவும்.

படிமுறை 04

- மாணவர்களுடன் ஒன்றிணைந்து பாடசாலையில் பறவைகள் சஞ்சரிக்கும் இடத்திற்கு பறவைகளின் உணவுத் தட்டு ஒன்றை அமைக்குக. பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களுக்கு உணவளிப்பது அவற்றின் பசியை தீர்க்கும் எனவும் அதனால் எமக்கு ஆசி கிடைக்கும் எனக் கூறல்.
- வீட்டில் பறவை உணவுத் தட்டு ஒன்றை அமைக்க மாணவரை வழிப்படுத்துக.
- கடவுள் படைத்த இவ் அழகிய பறவைகள் மற்றும் எல்லா நீர்வாழ் உயிரினங்களுக்காகவும் நன்றி செலுத்தி ஜெபம் செய்தல்.
- மாணவர்கள் அமைத்த குருவி அல்லது மீனை வகுப்பில் தொங்கவிடுங்கள். (பெயரிட்டு)

குருவி

- நிறக் கடதாசியில் சம அளவான 3 வட்டங்களை வெட்டி மற்றுமொறு சிறிய வட்டம் ஒன்றினை வெட்டி மாணவர் செயல்நூலில் காட்டப்பட்டுள்ள படி குருவி அல்லது மீனை அமைக்கவும்.
- சொண்டு மற்றும் கண்களை ஒட்டுக.

கணிப்பீடு:

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 9.3 உயிரி னங்களை அன்பு செய்வார். | 9.3.1 | உயிரினங் களுக்கு அன்பு செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை விளக்குவார். | உயிரினங் களுக்கு அன்பு செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை ஓரளவுக் கேனும் விளக்குவார். | உயிரி னங்களுக்கு அன்பு செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை மற்றுமொறு மாணவரின் உதவியுடன் விளக் குவார். | உயிரி னங்களுக்கு அன்பு செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை கூறுவதற்கு இடர்படுதல். |
| 9.4 உயிரி னங்க ளுக்கு ஆகாரம் வழங்குவார். | 9.4.1 | உயிரினங் களுக்கு ஆகாரம் வழங்கும் விதத்தைக் கூறுவார். | உயிரினங் களுக்கு ஆகாரம் வழங்கும் விதத்தை ஓரளவுக் கேனும் கூறுவார். | உயிரினங் களுக்கு ஆகாரம் வழங்கும் விதத்தை மற்றுமொறு மாணவரின் உதவியுடன் கூறுவார். | உயிரினங் களுக்கு ஆகாரம் வழங்கும் விதத்தைக் கூறுவதற்கு இடர்படுதல். |

## எண்ணகளெண்ணக்கரு - சமூக, கலாசார நல்லிணக்கம்

## பாடம் 5 - "மன்னிப்பு வழங்கிய ஸ்தேவான்"

| |
|---|
| தமது எதிரிகளுக்கு மன்னிப்பு வழங்கிய ஸ்தேவானின் முன்மாதிரியைப் பின்பற்றி தூய வாழ்வினை வாழ்வதற்கு வழிகாட்டுதல் இப்பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறு | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. சமய தோற்று விப்பாளர்கள்/ படைப்பாளர் குறித்த கதைகளையும் போதனைகளை யும் கவிதை வடிவில் நடத்தை விருத்திக்கு பொருத்தமான சிறப்பான பண்புகளைக் கூறுவர். | புதிய ஏற்பாட்டின் நபர் | 2.2 சமயம் சார்ந்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு சமய அறிஞர்களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேட பண்புகளைக் கூறுதல். |
| | | 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிக ளைக் கூறுதல். |

**கற்றல் வளங்கள்**

- ஸ்தேவானுக்கு கல் எறியும் படம்.
- பாடம் தொடர்பான காணொலி ஒன்று.
- ஸ்தேவானின் படம்.
- ஓரளவு பெரிய கல்இ ஓரளவு வெட்டப்பட்ட ஒத்த கறுப்பு கடதாசி உருவங்கள்.
- 2 தடிகள்
- கிராமம்
- திருவிவிலியம் - திருத்தூதர் பணி 7: 54-60

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படிமுறை 1**

பிள்ளைகளுக்கு ஸ்தேவானைப் பற்றி முக்கியமான விடயங்களை மிகச் சுருக்கமாகக் கூறவும். (திருத்தூதர் பணி 7:54-60) ஸ்தேவானின் படம் ஒன்றினைக் காண்பித்து அவர் திருவிவிலியத்தை நன்கு அறிந்தவர் என்றும் கடவுளுக்கும் அவரின் குமாரன் இயேசுவையும் நேசித்து மதித்த ஒரு மனிதன் எனக் கூறுங்கள்.

**படிமுறை 2**

ஸ்தேவான் தூய ஆவியிலும் விசுவாசத்திலும் நிறைந்த ஒரு மனிதர். அவர் அனைவருக்கும் உதவினார். கடவுளைப் பற்றியும் இயேசு சிலுவையில் அறையப்பட்டதையும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததையும் அவர் அறிந்திருந்தார். அதனை பயமின்றி கூறினார் எனவே அவரைக் கைது செய்தனர் என மாணவர்களுக்குக் கூறுங்கள்.

**படிமுறை 3**

ஸ்தேவானுக்கு கல் எறியும் படம் ஒன்றைக் காட்டுங்கள். அப்போது ஸ்தேவான் கூறியது (திருத்தூதர் பணி 7:55-57) இப்பகுதியை வாசிக்கவும். கடவுளின் வலது பக்கத்தில் இயேசு நிற்பதை ஸ்தேவான் கண்டார்.

**படிமுறை 4**

பாருங்கள் பிள்ளைகளே அவர் எவ்வளவு பெரிய மனிதர். அவர் நம்மிய இயேசுவைப் பற்றி போதிக்கவும் கற்பிக்கவும் மரித்தார். அவர் மரிக்கும் நேரத்திலும் தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காகவும் கல்லெறிந்தவர்களுக்காகவும் தீய வார்த்தைகளால் ஏசினவர்களுக்காகவும் கடவுளிடம் மன்னிப்பு கேட்டார். சிலுவையில் அறைந்து துன்புறுத்தி தண்ணீருக்கு பதிலாக காடியைக் கொடுத்தவர்களுக்காகவும் இயேசு கடவுளிடம் மன்னிப்பு கேட்டது போல

கிறிஸ்தவ சிறுவராக நாமும் அவ்வாறு இருக்க வேண்டும்.

**மாணவ கைநூலிற்கான வழிகாட்டல்:**

- “மன்னிப்பு கொடுத்தல்” என்ற சொல்லை வேறு நிறத்தில் எழுதுதல் அல்லது கடதாசியில் எழுதி ஒட்டவும்.
- ஸ்தேவானுக்கு கல் எறியும் படம் ஒன்றை நிறம் தீட்டக் கொடுக்கவும். பின்னர் ஒரு தடியின் உதவியுடன் கொடி ஒன்றை உருவாக்குதல்.
- நடுவில் மாணவர்களுக்கு இவ் வாக்கியத்தை எழுதக் கொடுங்கள்.(அவர்களின் பெயரைப் பயன்படுத்தி)
- “கல் எறிந்த மனிதர்களுக்கு ஸ்தேவான் மன்னிப்பு கொடுத்ததைப் போல .......... (பிள்ளையின் பெயர்) எனக்கு தீமை செய்பவர்களை மன்னிப்பேன்.”
- அதனைச் சுற்றி வடிவமைக்கும் படி கூறவும்.
- அதனைக் கொடியைப் போல் உருவாக்குதல்.
- இந்த இரு கொடிகளையும் ஓரளவு பெரிய இரண்டு கற்களுக்கு நடுவே ஒட்டவும். அதற்காக நன்றாக ஒட்டக்கூடிய சுப்பர் குலு பசை பயன்படுத்தவும். (ஆசிரியரினால் அதனை அமைத்தல்)
- ஸ்தேவானின் குணங்களை வட்டமிடுக.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமய அறிஞர்கள்/ சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு/ சமயம் சார்ந்த கதைகள் மற்றும் திரு விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட் டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங் காண்பார். | 2.2.1 | ஸ்தேவானிடம் காணப்பட்ட சிறந்த குணத்தை வெளிப்படுத்-துவார். | ஸ்தேவா-னிடம் காணப்பட்ட சிறந்த குணங்கள் சிலவற்றை வெளிப்படுத்-துவார். | ஸ்தேவா-னிடம் காணப்பட்ட சிறந்த குணத்தை மற்றுமொரு மாணவரின் உதவியுடன் விளக்குவார். | ஸ்தேவா-னிடம் காணப்பட்ட சிறந்த குணத்தை கூறுவதற்கு இடர்படுதல். |
| 2.3 சமயக் கதைகள் மூலமாகக் கிடைத்த முன்மா-திரிகளைக் கூறுவர். | 2.3.1 | ஸ்தேவானுக்கு கல் எறியும் போது அவர் அனுபவித்ததை வெளிப்படுத்-துவார். | ஸ்தேவா னுக்கு கல் எறியும் போது அவர் அனுப வித்ததை ஓரளவுக் கேனும் கூறுவார். | ஸ்தேவானு-க்கு கல் எறியும் போது அவர் அனுபவி த்ததை மற்றுமொரு மாணவரின் உதவியுடன் கூறுவார். | ஸ்தேவா னுக்கு கல் எறியும் போது அவர் அனுப வித்ததை கூறுவதற்கு இடர்படுதல். |

## எண்ணகளெண்ணக்கரு - பலம் ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை

## பாடம் 6 - கடவுளின் அனுபவத்தில் செயற்படுவோம்.

கடவுள் கொடுத்த வாழ்க்கையை நல்ல பழக்கங்களுடன் வாழ வழிநடத்துவதே இப் பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறு | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைபிடிப்பார். | நல்ல பழக்கம் | 10.2 சிறந்த சுகாதார பழக்கங்களைக் கடைபிடிப்பார். | 10.2.1 சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களை அனுசரித்தல். |
| 11 அன்றாட நடவடிக்கைகளின் போது அறிவுத் தெளிவுடன் சுயாதீனமாகச் செயற்படுவார். | | 11.3 எளிமையான முறையில் தியானத்தில் ஈடுபடுவார். | 11.3.1 உடல் அவயங்களின் பயன்பாட்டை சீரான முறையில் மேற்கொள்ளல் |

**கற்றல் வளங்கள்:**

- பாடசாலையினுள், ஆலயம் அல்லது வெளியில் அமைதியான இடம் மிகச் சிறந்தது.
- பாடல் அடிகள், மாணவர் கைநூலில் உள்ளது.
- வெள்ளை நிறத் துணியால் சுற்றிய பொம்மை
- மாட்டுத்தொழுவத்திற்காக காட்போட் பெட்டி
- ஆசிரியர் (மரியாளைப் போல்) நீல நிற அல்லது வெள்ளை நிறத் துணியொன்றினால் தலையை மூடி இருத்தல்.
- நிறம் தீட்டுவதற்கு வர்ணங்கள்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு**

**படிமுறை 1**

வகுப்பறையை விட்டு வெளியே அமைதியான ஒரு இடத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்லவும்.

(எழுந்து நின்று உடலை இலகுவாக வைத்து மூச்சை உள்ளே எடுக்கும் போதும் வெளியிடும் போதும் அத் திசைக்கு தலையை கொண்டுசெல்லும் படி மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.)

- இப்போது மூக்கு வழியாக மூச்சை உள்ளெடுத்து வெளியிடுதல் மற்றும் வாயைத் திறப்பது போன்ற பயிற்ச்சிகளில் கவனம் செலுத்துங்கள். (ஆசிரியருடன் இப்பயிற்ச்சியை 5 முறை செய்யவும்). பின்பு கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் உரையாடலை மேற்கொள்ளவும்.

- ஒரு குடும்பத்தில் சிறிய குழந்தையின் பிறப்பை கண்டிருக்கிறீர்களா?
- அந்தச் சூழல் எவ்வாறு இருக்கும்?
- புதிதாக பிறந்த குழந்தையின் இடம் சுத்தமாக இருக்கும் அல்லவா?
- எல்லாம் நேர்த்தியாக இருக்கும்.. அவை என்ன?
- குழந்தையின் உடை ஒரு பக்கத்திலும்இ நீர்/ பால் போத்தல். மாணவர் விடையளிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பால் குடித்ததும் என்ன கேட்கும்?
- ஆம்இ அம்மா குழந்தையை ஆட்டுவார். அவரை தாலாட்டுவார்.
- குழந்தை நித்திரை செய்ய அமைதியான சந்தர்ப்பம் வேண்டும் அல்லவா?.... “சத்தம் போடாதீர்கள்” குழந்தை நித்திரை செய்கின்றது. என ஆசிரியர் மாணவர்களுக்கு வீட்டிற்கு வேறு குழந்தையை அழைத்து வரும் சந்தர்ப்பத்தில் அமைதியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் படி கூறுதல்.
- அவ்வாறு சொல்லும் போது அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.

படிமுறை 2

இயேசுவின் பிறப்பிபை விளக்கும் வகையில் பின்வரும் வினாக்களை வினவுவதன் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- டிசம்பர் மாதம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு ஏன் முக்கியனானது?
- டிசம்பர் மாதத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் கொண்டாடும் சிறப்புப் பண்டிகை உங்களுக்கு நினைவில் இருக்கிறதா? ஆம்இ நத்தார்.
- நத்தார் என்பது குழந்தை இயேசுவின் பிறந்தநாள். இப்போது நாம் அனைவரும் அமைதியாக இருப்போம்.
- மென்மையான தியானத்திற்குத் தயாராவோம். அமைதியாக ஒரு பாடலைக் கேட்க செய்யுங்கள்.
- (ஒலிநாடா மூலம் மாணவர்கள் பாடலைக் கேட்க இடமளிக்கவும் அல்லது ஆசிரியர் பாடலைப் பாடுதல்.)

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ ஆராரோ
ஆரடிச்சு நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு

கண்ணே யடிச்சரார்
கற்பகத்தைத் தொட்டாரார்
தொட்டாரைச் சொல்லியழு
தோள் விலக்கு போட்டு வைப்போம்
அடிச்சாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்து வைப்போம்

மாமன் அடித்தானோ
மல்லிப் பூ செண்டாலே
அண்ணன் அடித்தானோ
ஆவாரங் கொம்பாலே
பாட்டி அடித்தாளோ
பால் வடியும் கம்பாலே

ஆராரோ ஆரிரரோ
ஆரிரரோ ஆராரோ
ஆரடிச்சு நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு

**மாணவர்கள் நினைப்பதைப்பற்றி கலந்துரையாடுங்கள்.**

- புதிதாகப் பிறந்த குழந்தையாகிய உங்களை, உங்கள் பெற்றோர் இவ்வாறு அன்பும் அக்கறையுடனும் நல்ல பழக்கவழக்கங்களை கடைபிடித்து பாதுகாத்தனர் என விளக்குங்கள்.
- சுத்தம்இ நேர்த்தியாக வேலை செய்தல், பெரியோருக்கு மற்றும் பிறருக்கு உதவி செய்தல் போன்றவை நாள்தோறும் வளர்த்துக்கொள்ள வேண்டியது என எடுத்துக்காட்டுக.

படிமுறை 3

- நல்ல பழக்கவழக்கங்கள் என்றால் என்ன? கலந்துரையாடல் மூலம் உதாரணங்களுடன் பாடத்தை தொடரவும்.
- சுத்தம் - பற்களை சுத்தமாக வைத்திருத்தல். சாப்பிடுவதற்கு முன் கைகளைக் கழுவுதல், கவனமாக உண்ணுதல். சாப்பிட்ட பின் பாத்திரங்களைக் கழுவுதல். சுத்தமான ஆடைகளை அணிதல்.
- சுத்தமான போஷணையுள்ள உணவு மற்றும் பானம் - காய்கறிகள் மற்றும் முட்டை போன்ற சத்தான உணவு உண்ணுங்கள்.
- உடல் உள ஆரோக்கியம்.
- மேலே கூறப்பட்ட நல்ல பழக்கங்கள் மூலம் ஆரோக்கியமாக வாழ முடியும் என மாணவர்களுக்கு தெளிவுபடுத்துக.

படிமுறை 4

(கலந்துரையாடல் மூலம் தெரியப்படுத்துங்கள்). உடலுக்கு உணவு தேவைப்படுவது போல மனதிற்கும் பல விடயங்கள் தேவை என கலந்துரையாடுக.

- புத்தகங்கள் வாசித்தல், படம் வரைதல், பாடல் பாடுதல், ஆடுதல் மற்றும் விளையாட்டுத் திறன்களை வளர்ப்பது மனதிற்கு மிகவும் நன்மை தரும் என விளக்குங்கள்.
- பொழுதுபோக்குகளில் ஈடுபடுதல் - உதாரணமாக அம்மாவும் அப்பாவும் பயிரொன்றை நடுவதற்கு உதவி செய்தல். மகிழ்ச்சியுடனும் வினோதமாகவும் செய்யலாம் எனக் கூறுங்கள்.
- எனக்குத் தெரியாதவற்றை என் நண்பர்களிடமிருந்து கற்றுக்கொள்ள விரும்புவது போல, எனக்குத் தெரிந்ததை என் நண்பர்களுக்கும் கற்பிக்க விரும்ப வேண்டும்.
- இவை அனைத்தையும் நிறைவேற்ற சுத்தம்இ சோம்பேறியாக இல்லாமல் இருப்பது மற்றும் விடாமுயற்சியுடன் வேலை செய்வது மிக முக்கியம் என மாணவர்களை தெளிவுபடுத்துக.
- இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் சிறிய வயதில் வாழ்ந்த விதத்தை
- முன்மாதிரியாகக் கொள்ள மாணவர்களுக்கு எடுத்துக் கூறவும்.
- இயேசு சிறுவயதில் தம்முடைய பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் கீழ்படிந்து வளர்ந்தார்.
- இயேசு குழந்தையாக இருந்தபோது தம் பெற்றோருக்கு மகிழ்ச்சியுடன் உதவினார்.
- அவை அனைத்தையும் நேர்த்தியாக செய்தார் என விளக்குங்கள்.
- நீங்களும் சிறு வயதிலிருந்தே உங்கள் மனதை எளிய தியானத்தில் செலுத்தி உங்கள் அன்றாட நடவடிக்கைகளில் மிக அமைதியுடன் செயற்பட வேண்டும்.
- ஆக்கமுள்ள பிள்ளையாக பிறருக்கு உதவுங்கள்.

**மாணவ கைநூலிற்கான வழிகாட்டல்:**

- ஆசிரியருடன் வாசித்தல்.
- மாணவர்கள் தம் பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் உதவி செய்யும் விதத்தை காண்பிக்கும் காட்சிப்படத்தைப் பார்த்து அவர்கள் செய்யும் விடயங்களை கண்டறிய வழிகாட்டுங்கள்.
- நீங்களும் சுறுசுறுப்பான பிள்ளையாக பிறருக்கு உதவ முன்வர வேண்டும் எனக் கூறுங்கள்.
- அடைப்புக்குள் உள்ள இரண்டு சொற்களில் சரியான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுவதற்கு வழிக்காட்டுக.
- திருவிவிலியத்தில் வசனத்தில் தொடர்புடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளுங்கள்.
- வேத வசனத்தை மாணவர்களுடன் சேர்ந்து வாசிக்கவும்.

**“அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார்.”**

**லூக்கா 2:51**

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 11.3 எளிமை யான முறையில் தியானத்தில் ஈடுபடுவார். | 11.3.1 | சமயச் சடங்குகளில் ஈடுபடும் போது சரியான உணர்வு களை வெளிப் படுத்துவார். | சமயச் சடங்குக- ளில் ஈடுபடும் போது சரியான உணர் வுகளை ஓரளவுக் கேனும் வெளிப்படுத்- துவார். | சமயச் சடங்குக- ளில் ஈடுபடும் போது சரியான உணர்வு- களை மற்றுமொறு மாணவரின் உதவியுடன் விள- க்குவார். | சமயச் சடங்குக- ளில் ஈடுபடும் போது சரியான உணர்வுகளை கூறுவதற்கு இடர்படுதல். |
| 10.2 சிறந்த சுகாதார பழக்கங் களைக் கடைபிடிப்- பார். | 10.2.1 | நல்ல பழக்க வழக்கங் களை வெளிப் படுத்துவார். | நல்ல பழக்க வழக்கங் களை ஓரளவு- க்கேனும் கூறுவார். | நல்ல பழக்க வழக்க ங்களை மற்றுமொரு மாணவரின் உதவியுடன் கூறுவார். | நல்ல பழக்க வழக்கங்களை கூறுவதற்கு இடர்படுதல். |

ක්‍රිස්තියානි ධර්මය ගුරු මාර්ගෝපදේශය (දෙ)
1 ශ්‍රේණිය
கிறிஸ்தவம் திருமறை ஆசிரியர் வழிகாட்டி (த)
தரம் 1